உ

திருச்சிற்றம்பலம்

# திருமுறைப் பயிற்சிக் கழகம்

## சிங்கப்பூர்

**“ திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்”**

## திருமுறைப் பாடத்திட்டம்

## நிலை ஒன்று


**தொகுப்பாக்கம்**

டாக்டர். ஆ. ரா. சிவகுமாரன்

சிவ ரா. பழனிவேல்

**ஒலிவட்டில் பாடியவர்**

திருமுறை கலாநிதி சோ. வைத்தியநாத தேசிக ஓதுவா மூர்த்தி.

அருள்மிகு தெண்டாயுதபாணி ஆலயம், சிங்கப்பூர்.



வெளியீடு

திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக்குழு

சிங்கப்பூர்

2013

# உள்ளடக்கம்


1. துதிப் பாடல்கள் ........ 5

**1.01** நற்றமிழ்வல்லநால்வர் துதி ........ 5

**1.02** திருஞானசம்பந்தர் தேவாரம் - பிடியதன் ........ 5

2. திருமுறைப் பாடல்கள் ........ 5

**2.01** திருஞானசம்பந்தர் தேவாரம் - தோடுடைய செவியன் ........ 5

**2.02** திருஞானசம்பந்தர் தேவாரம் - அருநெறியமறை ........ 6

**2.03** திருஞானசம்பந்தர் தேவாரம் - மந்திரமாவது நீறு ........ 6

**2.04** திருஞானசம்பந்தர் தேவாரம் - ஆற்றல் அடல் ........ 7

***2.05*** *திருநாவுக்கரசர் தேவாரம் - கூற்றாயினவாறு ........ 7*

**2.06** திருநாவுக்கரசர் தேவாரம் - சலம்பூவொடு ........ 8

**2.07** திருநாவுக்கரசர் தேவாரம் - மாசில் வீணையும் ........ 8

**2.08** திருநாவுக்கரசர் தேவாரம் - நமச்சிவாயவே ........ 9

**2.09** திருநாவுக்கரசர் தேவாரம் - வேற்றாகி ........ 9

**2.10** திருநாவுக்கரசர் தேவாரம் - பண்ணின் ........ 10

**2.11** சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - பித்தா ........ 10

**2.12** சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - காரூர்புனல் ........ 11

**2.14** சேக்கிழார் அருளிய பெரியபுராணம் - உலகெலாம் ........ 12

3. வாழ்த்துப் பாடல்கள் ........ 12

**3.01** வாழ்த்து - ஆறிருதடந்தோள் ........ 12

**3.01** வாழ்த்து - வான்முகில் ........ 12

4. உரைநடை ........ 13

**4.1** திருமுறைகள் ........ 13

4.1.1. திருமுறைகள் ஓர் அறிமுகம் ........ 13

4.1.2 வரலாற்றுக் குறிப்புகள் ........ 14

4.1.3 தமிழ் வேதங்களைக் கண்டெடுத்த வரலாறு. ........ 15

**4.2** திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ........ 16

**4.2** திருநாவுக்கரசு நாயனார் ........ 33

5. பயிற்சிப் பகுதி ........ 43

சில மாதிரி வினாக்கள் ........ 43

5. பாடத்திட்ட நூலாக்கத்திற்குப் பயன்பட்ட நூல்கள் ........ 48

# 1. துதிப் பாடல்கள்

## 1.01 நற்றமிழ்வல்லநால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி.
ஊழிமலி திருவாதவூரர்திருத் தாள் போற்றி.

## 1.02 திருஞானசம்பந்தர் தேவாரம் - பிடியதன்

தலம்: திருவலிவலம்

திருமுறை: 1-123-5

பண்: வியாழக்குறிஞ்சி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

திருச்சிற்றம்பலம்

# 2. திருமுறைப் பாடல்கள்

## 2.01 திருஞானசம்பந்தர் தேவாரம் - தோடுடைய செவியன்

தலம்: சீகாழி (திருப்பிரமபுரம்)

திருமுறை: 1-1-1

பண் : நட்டபாடை

தாளம் : ரூபகம்

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மான்னிவனன்றே.

திருச்சிற்றம்பலம்

## 2.02 திருஞானசம்பந்தர் தேவாரம் - அருநெறியமறை

தலம்: சீகாழி (திருபிரமபுரம்)

திருமுறை: 1-1-11

பண்: நட்டபாடை

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தல் எளிதாமே

திருச்சிற்றம்பலம்

## 2.03 திருஞானசம்பந்தர் தேவாரம் - மந்திரமாவது நீறு

தலம்: திருஆலவாய்

திருமுறை: 2-66-1

பண்: காந்தாரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே

திருச்சிற்றம்பலம்

## 2.04 திருஞானசம்பந்தர் தேவாரம் - ஆற்றல் அடல்

தலம்: திருஆலவாய்

திருமுறை: 2-66-11

பண்: காந்தாரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றி புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றி தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே

திருச்சிற்றம்பலம்

## 2.05 திருநாவுக்கரசர் தேவாரம் - கூற்றாயினவாறு

தலம்: திருஅதிகைவீரட்டானம்

திருமுறை: 4-1-1

பண்: கொல்லி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமைபல
செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே

திருச்சிற்றம்பலம்

## 2.06 திருநாவுக்கரசர் தேவாரம் - சலம்பூவொடு

தலம்: திருஅதிகைவீரட்டானம்

திருமுறை: 4-1-10

பண்: கொல்லி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே

திருச்சிற்றம்பலம்

## 2.07 திருநாவுக்கரசர் தேவாரம் - மாசில் வீணையும்

தலம்: பொது

திருமுறை: 5-90-1

ராகம்: நாதநாமக்கிரியா

தாளம்: ஆதி

தனித்திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
முசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

திருச்சிற்றம்பலம்

## 2.08 திருநாவுக்கரசர் தேவாரம் - நமச்சிவாயவே

தலம்: பொது

திருமுறை: 5-90-10

ராகம் : நாதநாமக்கிரியா

தாளம் : ஆதி

தனித்திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே

திருச்சிற்றம்பலம்

## 2.09 திருநாவுக்கரசர் தேவாரம் - வேற்றாகி

தலம்: திருக்கயிலாயம்

திருமுறை: 6-55-1

ராகம்: அரிகாம்போதி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள் என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

## 2.10 திருநாவுக்கரசர் தேவாரம் - பண்ணின்

தலம்: திருக்கயிலாயம்

திருமுறை: 6-55-10

ராகம்: அரிகாம்போதி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி

பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி

எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி

என் சிந்தை நீங்கா இறைவா போற்றி

விண்ணும் நிலனும் தீ ஆனாய் போற்றி

மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி

கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

## 2.11 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - பித்தா

தலம்: திருவெண்ணெய்நல்லூர்

திருமுறை: 7-1-1

பண்: இந்தளம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா

எத்தான் மறவாதே நினைக் கின்றேன் மனத்துன்னை

வைத்தாய் பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர்

அருட்டுறையுள்

அத்தா உனக்காளாயினி அல்லேன் எனல் ஆமே.

திருச்சிற்றம்பலம்

## 2.12 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - காரூர்புனல்

தலம்: திருவெண்ணெய்நல்லூர்

திருமுறை: 7-1-10

பண்: இந்தளம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்

பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்

சீரூர்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்

ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன் எனல் ஆமே

திருச்சிற்றம்பலம்

## 2.13 மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்-அம்மையே

தலம்:

திருமுறை: 8-37-3

ராகம் மோகனம்

தாளம் ஆதி

திருச்சிற்றம்பலம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே

அன்பினில் விளைந்த ஆரமுதே

பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்

புழுத்தலைப் புலையனேன் தனக்குச்

செம்மையே ஆய சிவபதம் அளித்த

செல்வமே சிவபெருமானே

இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்

எங்கெழுந் தருளுவ தினியே.

திருச்சிற்றம்பலம்

## 2.14 சேக்கிழார் அருளிய பெரியபுராணம் - உலகெலாம்

திருமுறை: 12-1-1

பண்: இந்தளம்

ராகம்: மத்தியமாவதி

திருச்சிற்றம்பலம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

திருச்சிற்றம்பலம்

# 3. வாழ்த்துப் பாடல்கள்

## 3.01 வாழ்த்து - ஆறிருதடந்தோள்

ராகம்: மத்தியமாவதி

தாளம் ஆதி

திருச்சிற்றம்பலம்

ஆறிருதடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## 3.01 வாழ்த்து - வான்முகில்

ராகம்: மத்தியமாவதி

தாளம் ஆதி

திருச்சிற்றம்பலம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# 4. உரைநடை

## 4.1 திருமுறைகள்

### 4.1.1. திருமுறைகள் ஓர் அறிமுகம்

**தேவாரத் திருமுறைகள் என்பவை யாவை?**

சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டு, அவரது கருணை வெள்ளத்தில் முழ்கித் திளைத்த அருளாளர்கள், தாம் பெற்ற பேரின்பத்தை நாமும் பெறுதல் வேண்டும் எனும் உயர்ந்த நோக்கத்துடன் அருளியவைதான் தேவாரத் திருமுறைகள்.

**தேவாரம் என்றால் என்ன?**

தேவாரம் எனும் சொல் இறைவன் மீது அன்பு உண்டாகும்படி செய்வது (தே+வாரம் தே-இறைவன் வாரம்-அன்பு) என்றும், (தே+ஆரம் தே-இறைவன், ஆரம்-மாலை) இறைவனுக்கு என்றும் வாடாத பாமாலையாகச் சூட்டப்பட்டவை என்றும் இரு பொருள்படும்.

**திருமுறை என்றால் என்ன?**

திருமுறை எனும் சொல், நிலையான முத்தி செல்வத்தை உலகமக்கள் எளிதில் பெறுவதற்கு உதவும் நூல் எனப் பொருள்படும்.

### 4.1.2 வரலாற்றுக் குறிப்புகள்

| | |
|---|---|
| திருமுறைகள் அருளப்பட்ட காலம் | 2ம் நூற்றாண்டு முதல் 12ம் நூற்றாண்டு |
| அருளப்பட்ட இடம் | தமிழ் நாடு |
| திருமுறைகள் மொத்தம் | 12 |
| திருமுறை ஆசிரியர்கள் மொத்தம் | 27 |
| திருஞானசம்பந்தர் அருளியவை | 1,2,3ம் திருமுறைகள் |
| திருநாவுக்கரசர் அருளியவை | 4,5,6ம் திருமுறைகள் |
| சுந்தரர் அருளியவை | 7ம் திருமுறை |
| மாணிக்கவாசகர் அருளியவை | 8ம் திருமுறை |
| திருமாளிகைதேவர்,சேந்தனார்,கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டாராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர். | 9ம் திருமுறை (திருவிசைப்பா, திருபல்லாண்டு) |
| திருமுலநாயனார் | 10ம் திருமுறை (திருமந்திரம்) |
| திருஆலவாயுடையார், காரைக்காலம்மையார்,சேரமான் பெருமான், ஐயடிகள் காடவர்கோன், பட்டினத்துபிள்ளையார் ,நக்கீரதேவ நாயனார், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார், இளம்பெருமான்அடிகள், அதிராவடிகள்,நம்பியாண்டார் நம்பி | 11ம் திருமுறை |
| சேக்கிழார் | 12ம் திருமுறை ( பெரியபுராணம் ) |

### 4.1.3 தமிழ் வேதங்களைக் கண்டெடுத்த வரலாறு.

திருநாறையூரில் கோயில் கொண்டிருக்கும் பொல்லாப் பிள்ளையாருக்கு ஓர் ஆதிசைவக் குடும்பம் பூசை செய்து வந்தது. அந்த அர்ச்சகர் ஒரு நாள் வெளியூர் செல்ல வேண்டி இருந்தது. அதனால் தம் புதல்வரிடம் பூசை செய்யும் பொறுப்பினை விட்டுச்சென்றார். அப்பிள்ளையும் பிள்ளையாருக்கு அபிடேகம் முதலியன எல்லாம் முடித்து, அமுதினைத் திருமுன் படைத்தார். பிள்ளையார் சாப்பிடவில்லை வருத்தமுற்ற அச்சிறுபிள்ளைத் தமது தலையினைக் கல்லிலே மோதி உயிர்விடத் துணிந்தார். உடனே பிள்ளையார் நம்பி பொறு என்று திருவாய் மலர்ந்துத திருவமுதினை ஏற்று அருளினார். இதனால் மகிழ்ச்சியுற்ற அந்தச் சிறுவன், பள்ளி செல்ல காலதாமதம் ஆகியதால், பிள்ளையாரிடமே சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். இவ்வாறு பொல்லாப் பிள்ளையாரின் திருவருளைப் பெற்ற காரணத்தால், நம்பி ஆண்டார் நம்பி எனப்பெயர் பெற்றார்.

இவற்றையெல்லாம் கேள்விப்படுகின்றார் இராசராச மாமன்னர். தமிழ் வேதப்பாக்களை இராசராசன் முன்பு யாராவது பாடினால் அவரது கைகள் தானாகத் தலைமீது குவியுமாம், கண்களில் நீர் ததும்பி வழியுமாம். அவரது உடல் விதிர்விதிர்ப்பெய்துமாம். அதனால் அவர் அத்தகைய அருட்பாடல்களை எல்லாம் கண்டெடுத்து மக்களிடையே பரப்பவேண்டும் என்று பேராவல் கொண்டிருந்தார்.

நாறையூர் பொல்லாப் பிள்ளையாரின் திருவருளுக்குப் பாத்திரமான நம்பியாண்டார் நம்பி மூலம் தமிழ் வேதங்களைக் கண்டெடுக்க விரும்பி, நாறையூர் வந்தார். நம்பிகள் மூலம் விநாயகப்பெருமானுக்குச் சிறப்பான அபிடேக ஆராதனைகள் செய்து முடித்தார். மன்னரின் வேண்டுகோளின்படி, நம்பியாண்டார் நம்பியும் திருமுறைகள் இருக்குமிடத்தை அருளிச்செய்யும்படி பிள்ளையாரை வேண்டினார். அவரும் தில்லை பொன்னம்பலத்தின் அருகே தேவார ஆசிரியர்களின் இலச்சனை உள்ள அறையில் திருமுறைகள் வைத்துப் பூட்டப்பட்டுள்ளன என அருளினார்.

இதனைக் கேட்டு மகிழ்ந்த இராசராசன், பூட்டப்பட்டுள்ள அறையின் முன்னர் நால்வர் திருஉருவங்களையும் கொண்டு வந்து நிறுத்தி அறையினைத் திறந்தார். அறையினுள் திருமுறைப்பதிகங்கள் அடங்கிய

ஓலைச்சுவடிகள் கரையான் புற்றினால் மூடப்பட்டுச் சிதைந்திருந்தன. பெரும்பாலான ஏடுகள் பழுதடைந்திருந்தன. இவற்றைக் கண்ட மன்னர் அளவிலாத் துன்பப்பட்டார். அது சமயம் இக்காலத்திற்கு வேண்டியவற்றை மட்டும் விட்டு விட்டுப் பிறவற்றைச் செல்லரிக்கச் செய்தோம் எனப் பெருமான் அசரீரியாகச் சொன்னார்.

இதனால் மனம் தேறிய மன்னர், நம்பியாண்டார் நம்பியைக் கொண்டே (திருமுறைகளை) தமிழ் வேதங்களைப் பதினொன்றாக வகுத்தார். பிறகு சேக்கிழார் அருளிய பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது.

இந்தத் தமிழ்வேதப் பாசுரங்கள் யாவும் அறிவு கொண்டு பாடப்பட்டவை அல்ல. ஆண்டவன் அருளால் பாடப்பட்டவை. இப்பாசுரங்கள் யாவும் செஞ்சொல் தமிழ் மாலை. குற்றமில் செந்தமிழ், தவமல்குதமிழ், ஒண்தமிழ், புண்ணியசெந்தமிழ், தீந்தமிழ், திருநெறிய தமிழ், நிகரில்லனதமிழ், அருந்தமிழ், எழுதும் மாமறை, சீர்மிகு தமிழ், தண்டமிழ், நலமிகு பாடல்கள் என்று பலவாறாகப் புகழப்படும் பாக்களாகும்.

## 4.2 திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

சோழநாட்டில் சீர்காழி என்றபதி ஒன்று உளது, அதற்கு "பிரமபுரம்" "வேணுபுரம்" முதலான பன்னிரண்டு பெயர்கள் உண்டு அந்தத் தலத்தில் அந்தணர் குலத்தில் கௌணியர் கோத்திரத்தில் "சிவபாத இருதயர்" என்பவர் தோன்றியிருந்தார் அவருடைய மனைவியார் பெயர் "பகவதியார்". அவ்விருவரும் சிவநெறியினர். அவரது காலத்தில் சமணசமயமும் பௌத்த சமயமும் தமிழகத்தில் ஓங்கியிருந்தன. அதனால் அவர் துன்பம் கொண்டார். அவ்விரண்டின் ஆதிக்கத்தையும் அழித்துச் சைவத்தை வளர்க்கும் ஆண்மகன் தமக்கு வேண்டும் என்று அவர் விரும்பித் தவம் கிடந்தார். அவருடைய மனைவியாரும் திருத்தோணியப்பரை வணங்கி வந்தார்.

சைவம் தழைக்க அவ்விருவருக்கும் திருவாதிரையில் ஞானசம்பந்த பெருமான் தோன்றியருளினார்.

ஒருநாள் தந்தையார் சிவபாத இருதயர், தோணியப்பரை வணங்குதற்குச் சென்றார். அப்போது ஞானசம்பந்தரும் உடன் வரவேண்டும் என அழுதார். வேறு வழியின்றித் தந்தையார் அவரை

அழைத்துக்கொண்டு சென்றார். அவரைக் கரையில் இருக்கச்செய்துவிட்டுச் சிவபாத இருதயர் நீருக்குள் முழுகினார். "தம் தந்தையைக் காணவில்லையே" என்ற அழலானார். "அம்மே, அப்பா!" என விளித்தார். அப்போது தோணியப்பர் சம்பந்தரின் அழுகையைப் பொறுக்க மாட்டாதவராய் பார்வதிபரமேசுவரனாக எழுந்தருளினார் உமையம்மையாரை நோக்கி "இவனுக்குப் பால் ஊட்டு" என்றார். அம்மையார் அவ்வண்ணமே ஊட்டினார். (அவர் இறைவரால் ஆளப்பட்ட பிள்ளையானதால் "ஆளுடைய பிள்ளை" எனவும் முனிவர்க்கும் எட்டாத சிவஞானத் தொடர்பு பெற்றதால் "ஞானசம்பந்தர்" எனவும் அழைக்கப்பெற்றார்.

நீராடிய சிவபாத இருதயர் மேலே வந்தார். அங்குத் தம் மகன் பாலை அருந்தியிருப்பதைப் பார்த்தார். "நீ யார் கொடுத்த பாலை உண்டாய்? காட்டு!" என்று ஒரு கோலை எடுத்து ஓச்சினார். ஞானசம்பந்தப் பெருமான் உச்சி மீது கொண்ட கையின் விரலால் சுட்டி, வானில் உமைபாகராய் நின்றருளிய சிவபெருமானைக் காட்டினார். "தோடுடைய செவியன்" எனத்தொடங்கும் பதிகத்தைப் பாடினார். தம்மைப் பால் அருந்தச் செய்தவர் சிவபெருமான் என்பதை அப்பாட்டில் விளக்கினார்.

அங்ஙனம் இறைவர், ஞானசம்பந்தருக்குக் காட்சி தந்ததைச் சிவபாத இருதயர் உணர்ந்தார். ஞானசம்பந்தரும் சிவபாத இருதயரும் கோவிலுக்குச் சென்றனர். பின்பு அப்பிள்ளையாரைத் தோளில் சுமந்து தம் இல்லத்தை அடைந்தார். அந்நிகழ்ச்சியை அறிந்தவர் அனைவரும் வியந்தனர். அப்பிள்ளையாரை வழிபட்டனர்.

பின் ஆளுடைய பிள்ளையார் சிவ பெருமான் வீற்றிருக்கும் "திருக்கோலக்கா" என்ற பதிக்குச் செல்ல புறப்பட்டார். தந்தையார் அவரைத் தோளில் சுமந்து சென்று "மடையில் வாளை" என்ற பதிகத்தைப் பாடினார். அப்போது சிவபெருமானின் நாமமான ஐந்தெழுத்துப் பொறித்த செம்பொன் தாளங்கள் அவர் கையில் வந்தன. இறைவன் திருவருளை வியந்து பதிகத்தைப்பாடினார். பின் சீர்காழிக்குத் திரும்பினார். அந்த பதியில் வாழ் அந்தணர்கள் அவரை வணங்கித் துதித்தனர்.

"திருநனி பள்ளி" என்ற தலம் ஞான சம்பந்தரைப் பெற்ற தாயார் பிறந்தவூர். அந்தவூரில் உள்ள அந்தணர், தம் ஊருக்கு ஞானசம்பந்தர் எழுந்தருள வேண்டும் என்று வேண்டினர். ஞானசம்பந்தரும் அதற்கு இசைந்து புறப்பட்டார். அந்த தலத்தில் இறைவனை வணங்கித் தங்கியிருந்தார். பின் அங்கிருந்து நீங்கித் தலைசங்காடு, திருவலம்புரம், பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லை வாயில் முதலான தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டார். பின் தம் பதிக்குத் திரும்பினார்.

அப்போது திருநீலகண்ட யாழ்பாணர் அவரைக் கண்டு வணங்க வந்தார். ஞானசம்பந்தர் அவரைக் அழைத்துக்கொண்டு கோயிலுக்கு போய் யாழ் வாசிக்கும்படி உரைத்தார். அதன்பின் ஞானசம்பந்தர் அவரைத் தம் இருப்பிடத்தில் தங்கும்படிச் செய்தார். ஞானசம்பந்தரின் பதிகங்களைக் கேட்டு மகிழ்ந்தார். "தங்கள் பாக்களை யாழில் இட்டு வாசிக்க எனக்கு அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டினார். திருஞானசம்பந்தரும் அதற்கு இசைந்தார். அன்றிலிருந்து சம்பந்தரின் பதிகங்களை யாழில் இசைக்கும் வாய்ப்பைப் பெற்று அவருடன் பிரியாமல் இருந்து வந்தார். தில்லையில் வீற்றிருக்கும் கூத்தப்பெருமானை வணங்க வேண்டும் என்ற எண்ணம் ஞானசம்பந்தருக்கு ஏற்பட்டது. அதனால் தம் தந்தையுடனும் திருநீலகண்ட யாழ்ப்பாணருடனும் தில்லைக்குச் சென்றார். இறைவனை வழிபட்டுக் "கற்றாங்கு எரி" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். பின் திருவேட்களம் சென்று இறைவரை வணங்கி அங்குத் தங்கியிருந்தார். அங்கிருந்து திருக்கழிப்பாலைக்குச் சென்று இறைவனை வணங்கிப் பதிகம் பாடினார்.

ஒருநாள் அவர் தில்லைக்குச் சென்ற போது தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் சிவகண நாதர்களாகக் காட்சி தருவதை உணர்ந்தார். பாணருக்கும் அதைக் காட்டினார். பின்னர்க் கோயிலுக்குள் சென்று "ஆடினாய் நறுநெய்" எனத்தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அதில் தில்லை வாழ் அந்தணரைத் தாம் கண்டபடி விவரித்துள்ளார்.

நீலகண்ட யாழ்பாணர் தாம் பிறந்த ஊரான திருவெருக்கத்தம் புலியூர் முதலிய தலங்களுக்கு எழுந்தருளவேண்டும் என வேண்டிக் கொண்டார். அதற்குச் சம்மதித்து அந்த பதிக்கும் திருமுது குன்றம் முதலான பதிகளுக்கும் சென்று மாறன்பாடி என்ற பதியை அடைந்தார், அப்போது அவர் நடந்தே சென்றார்.

திருவரத்துறையில் வீற்றிருக்கின்ற இறைவர் ஞானசம்பந்தருக்கு முத்து சிவிகையும், முத்துக் குடையும் முத்துச் சின்னங்களும் அளிக்க எண்ணி, அந்தவூர் அந்தணரின் கனவில் தோன்றி "ஞான சம்பந்தன் நம்மிடத்திற்கு வருகின்றான். அவனுக்கு நம்மிடத்திலிருந்து முத்துச் சிவிகை, முத்துக் குடை, முத்துச் சின்னங்கள் என்பவனவற்றைக் கொண்டுபோய்க் கொடுங்கள்" என்று அருள்செய்தார். காலையில் அவர்கள் கோயிலைத் திறந்து பார்த்தனர். அங்கு இறைவரால் அருளப்பட்ட முத்துசிவிகை முதலியன இருந்தன. அவற்றை அவர்கள் எடுத்துச் சென்று ஞானசம்பந்தருக்குத் தந்தனர். இச்செய்தியை இறைவர் ஞானசம்பந்தருக்கும் கனவில் உரைத்திருந்தார். திருவரத்துறை இறைவரின் திருவருளை வியந்து "எந்தை யீசன்" எனத்தொடங்கும் பதிகத்தைப்பாடினார். திருவைந்தெழுத்தை ஓதி அந்த முத்துச் சிவிகையை வலம் வந்து வணங்கி ஏறியருளினார். அப்போது பேராரவாரம் எழுந்தது!

"ஞானசம்பந்தர் வந்தார்" எனக் கட்டியம் கூறத் திருவரத்துறைக்குச் சென்றார். இறைவர் மீது பதிகம் பாடினார். அங்குத் தங்கியிருந்தார். சிலநாட்கள் சென்றன. ஞான சம்பந்தர் தம் சீகாழிக்குத் திரும்ப எண்ணினார். திருப்பழவூர், திருவிசயமங்கை, திருவைகா, திருப்புறம்பியம் என்ற தலங்களை வணங்கிக் கொண்டு திருசேய்நல்லூர் சென்று இறைவரை வணங்கிப் "பீரடைந்த" எனத்தொடங்கும் பதிகத்தைப் பாடித் துதித்தார். பின்னர் திருப்பனந்தாள், திருபந்தணை நல்லூர், திருவோமாம் புலியூர், திருவாளொளிப் புற்றூர், திருக்கடம்பூர், திருநாறையூர், திருக்கருப்பறியலூர் ஆகிய பதிகளை வணங்கியபடி சீர்காழிக்கு வந்தார். அப்போது அந்தண நங்கையர் கூடித் தூபதீபம் முதலானவை ஏந்தி வரத், தாயார் பகவதியார் வரவேற்கத் தம் இல்லத்தை அடைந்தார்.

அவருக்குப் பூணூல் அணியும் பருவம் வர அந்தணர்கூடி அந்தச் சடங்கை நிறைவேற்றினர். அப்போது அந்தணர்களுக்கு வேதங்களில் உண்டான ஐயப்பாட்டை அவர் போக்கியருளினார். அந்தணர் அவருடைய வேத ஞானத்தை கண்டு வியப்புக் கொண்டனர்.

நாள்தோறும் தோணியப்பரை வணங்கிப் பதிகம் பாடிய வண்ணம் ஞானசம்பந்தர் சீர்காழியில் தங்கியிருந்தார். அக்காலையில் திருநாவுக்கரசர், ஞானசம்பந்தரைக் காண வேண்டும் என்னும் விருப்பம் கொண்டு அவரைக் காண்பதற்குச் சீர்காழி வந்தார். சம்பந்தர் அவரை எதிர்கொள்ளச் சென்றார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி கொண்டனர். அவரைத் தம் மாளிகையில் தங்குமாறு செய்தார். பின்னர்த் திருநாவுக்கரசர் மற்ற பதிகளை வணங்குவதற்காக ஞானசம்பந்தரைப் பிரிந்து சென்றார்.

நாட்கள் சில சென்றன. தமிழகத்தில் உள்ள தலங்கள் பலவற்றையும் சென்று வணங்க எண்ணம் கொண்டார் ஞானசம்பந்தர். தந்தையாரும் அவரைப் பிரிந்திருக்குமாட்டாமல் உடன் சென்றார். தந்தையாரும் திருநீலகண்ட யாழ்பாணரும் உடன் வர அவர் புறப்பட்டார். காவிரிக்கு வடக்கில் மேற்றிசை நோக்கிச் சென்று, திருப்புள்ளிருக்கு வேளூர், திருநின்றியூர், திருநீடுர், திருப்புன்கூர், திருமண்ணிப் படிக்கரை, திருக்குறுக்கை, திருவன்னியூர், திருப்பந்தணை நல்லூர், திருக்கோடிகா, கஞ்சனூர், திருமங்கலக்குடி, திருவியலூர் முதலான பதிகளுக்குப் போய் இறைவரை வணங்கினார்.

பின்பு மழ நாட்டில் காவிரியின் வடகரையே போய் திருப்பாச்சிலாச்சிரமத்தை அடையலானார். அங்குக் கொல்லி மழவன் மகள் "முயலகன்" என்ற நோயினால் வருந்த அவளைக் கோயிலில் இட்டு வைத்தான். அவன் ஞானசம்பந்தர் அங்கு வருவதை அறிந்து தன் மகளை நீங்கி நகரை அலங்கரித்து அவரை வரவேற்று, அவரது அடியில்

வீழுந்தான். பின் அவருடன் கோயிலுக்குள் சென்றான். சம்பந்தர் அங்கு கிடக்கும் கொல்லி மழவனின் மகளைப் பார்த்து "இது என்ன?" என்றார்.அவன் நிகழ்ந்ததைக் கூறினான். அவர் வருந்தி அப்பெண்ணின் நோயை நீக்கும் பொருட்டு "துணிவளர் திங்கள்" என்ற பதிகத்தைப் பாடினார். அப்பெண் நோய் நீங்கி எழுந்தாள். மழவன் மகிழ்ந்தான்.

சில நாட்கள் அங்குத் தங்கியிருந்தார். பின் கொங்கு நாட்டுக்குச் சென்று கொடி மாடச் செங்குன்றூரில் தங்கியிருந்தார். அப்போது அங்கு அவருடன் இருந்த பரிவாரம் சுர நோயினால் வாட்டம் அடைந்தது. அதை அறிந்த சம்பந்தர் "அவ்வினைக்கு இவ்வினையாம்" என்ற திருநீலகண்டப் பதிகத்தைப் பாடினார். அப்போது அவருடைய பரிவாரம் மட்டுமன்று, அந்நாடு முழுவதும் அப்பிணி நீங்கியது. பின் அங்குள்ள பல தலங்களை வணங்கிய வண்ணம் கொங்கு நாட்டைக் கடந்து சோழ நாட்டை அடைந்தார்.

சோழநாட்டில் திருப்பராய்துறை, திருக்கற்குடி மலை, திருமுக்கீச்சரம், திருச்சிராப்பள்ளி முதலான தலங்களை வணங்கித் திருவலஞ்சுழியை அடைந்தார். அங்கு இருக்கும் போது முதுவேனிற்காலம் வந்தது. அங்கிருந்து திருப்பட்டீச்சரத்துக்குப் போகப் புறப்பட்டார். அப்போது சிவ பூதம் பிள்ளையாரின் தலைக்கு மேலே முத்து பந்தரை அமைத்துப் "பட்டீசர் எம்மை விடுத்தார்" எனக் கூறிற்று. அந்தச் சொல்லும் முத்துப்பந்தரும் வானத்தில் தோன்றின. அம்முத்துப் பந்தர் நிழல் செய்யப் பட்டீச்சரத்தை அடைந்து இறைவரை வணங்கினார். பின் அங்கிருந்து நீங்கித் திருவாறை வடதளி முதலான பதிகளை வணங்கித் திருவாவடுதுறையை அடைந்தார்.

சிவபாத இருதயர் வேள்வி செய்ய வேண்டும் என எண்ணினார். ஆதலால், அவர் வேள்விக்குப் பொருள் வேண்டும் என்று வேண்டினார். ஞானசம்பந்தர் இறைவனிடம் போய்ப், பொருளை விரும்பிக் கேட்டவருக்குக் கொடுக்க என்னிடம் பொருள் இல்லை" என்றார். உடனே ஒரு பூதம் பொன் முடிப்பை கொணர்ந்து பலி பீடத்தில் இட்டது. அப்பூதம் "இம்முடிப்பில் ஆயிரம் பொன் உள்ளது. எடுக்க எடுக்க குறையாது. சிவபெருமான் உனக்கு கொடுத்தது" என்று கூறியது. அதைத் தந்தையாருக்குத் தந்து வேள்வியை இயற்றும்படிச் செய்தார்.

திருவாவடுதுறையில் சில நாட்கள் ஞானசம்பந்தர் தங்கியிருந்தார். பின்பு திருநல்லம், திருவழுந்தூர், திருத்துருத்தி, முதலிய தலங்களை வணங்கித் தருமபுரத்தை அடைந்தார். அவ்வூர் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் தாயார் பிறந்தவூர். அங்குள்ள அவரது சுற்றத்தார், "நீங்கள் ஞானசம்பந்தரின் பதிகங்களை யாழில் இசைப்பதால் தான் அவற்றின் புகழ் வளர்கின்றது!" என்று உரைத்தனர். அதைக் கேட்ட

பாணர் நடுங்கிச் சம்பந்தரை, தம் யாழில் அடங்காத பதிகம் ஒன்றைப் பாடும்படி வேண்டினார். ஞானசம்பந்தர், "மாதர் மடப்பிடி" என்னும் பதிகத்தைப் பாடினார். அது யாழில் அடங்கவில்லை, அதனால் பாணர் தம் யாழை உடைக்கப் போனார். சம்பந்தர் அவரைத் தடுத்து நிறுத்தினார். "இறைவரின் திருவருள் பெருமையெல்லாம் இதனுள் எவ்வாறு அடங்கும்?" என்று கூறி அமைதிப்படுத்தினார்.

அந்த தருமபுரத்தில் ஞானசம்பந்தரும் பாணரும் சில நாட்கள் தங்கியிருந்தனர். பின்பு அவர்கள் திருச்சாத்த மங்கை என்ற தலத்தை அடைந்தனர்.

அந்த ஊரானது திருநீலநக்கநாயனார் வாழும் ஊர். அவர் ஞானசம்பந்தர் முதலியவர்களை வரவேற்று விருந்தளித்தார். அதன்பின் அப்பதியை விட்டு நீங்கித் திருநாகைக்காரோணம், திருகீழ் வேளூர் வணங்கி திருச்செங்காட்டங்குடி என்ற பதியை அடைந்தார். அவரது வருகையைச் செவியேற்ற சிறுத்தொண்ட நாயனார் எதிர்கொண்டு வரவேற்றார். அவரது தொண்டினை ஞானசம்பந்தர் தம் பதிகத்தில் போற்றிப்பாடினார். சில நாட்கள் அங்குத் தங்கியிருந்த பின் புறப்பட்டுச் சென்று திருமருகல் என்ற தலத்தை அடைந்தார்.

அங்கு ஒரு வணிகன் கன்னிப் பெண் ஒருத்தியுடன் வந்தான். அவனைப் பாம்பு கடிக்க இறந்தான். அவனுடன் வந்த கன்னி இறைவனை நோக்கிப் புலம்பலானாள். கோயிலுக்குச் சென்று கொண்டிருந்த ஞானசம்பந்தரின் திருச்செவியில் அவளது ஓலம் விழுந்தது. அவர் அவளை நெருங்கி "உனக் குற்ற துயர் யாது?"

என்று வினவினார். அவள் உற்றது உரைத்தாள். ஞானசம்பந்தர் "சடையா எனுமால்" என்ற பதிகத்தைப் பாடினார். அந்த வணிகன் உயிர் பெற்றெழுந்தான். அக்கன்னிப் பெண் ஆளுடைய பிள்ளையை வணங்கினாள். அந்த இருவருக்கும் மணத்தைச் செய்து வைத்தார் சம்பந்தர்.

அதன் பின் சிறுத்தொண்டர் தம் ஊர்க்கு அவரை எழுந்தருளும்படி வேண்டினார். சம்பந்தரும் இசைந்து திருச்செங்காட்டங்குடிக்குச் சென்றார். அங்கு சில நாட்கள் இருந்த பின்னர்ப் திருப்புகலூர் சென்றார். அங்கு முருக நாயனார் அவரை வரவேற்றார். அவரது தொண்டினை ஞானசம்பந்தர் தம் பதிகத்தில் போற்றிப்பாடினார்.

அந்தப் பதியில் தங்கியிருந்தபோது நாவுக்கரசர் அந்தத் தலத்திற்கு வந்தார். அவரை எதிர் கொண்டு வரவேற்றார் சம்பந்தர். அப்பர் தாம் திருவாரூரில் கண்ட திருவாதிரை விழாவின் சிறப்பைச் சம்பந்தருக்குக் கூறினார். அதனால் திருவாரூரைக் கண்டு வணங்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு ஏற்பட்டது. நாவரசரிடம் விடைப்பெற்றுச் சம்பந்தர் திருவாரூரை நோக்கிச் சென்றார்.

அவரது வருகையை அறிந்த திருவாரூர் சிவனடியார்கள் நகரை அலங்காரம் செய்து வரவேற்றனர். சம்பந்தர் கோயிலுள் சென்று வலம் வந்து திருமுன்பு நின்று ஆடிப்பாடி மகிழ்ந்தார். அங்கிருந்த நாள்களில் திருவரநெறிக் கோயிலுக்குச் சென்று வழிபடுவது அவர்க்கு வழக்கமாக இருந்தது. சில நாட்கள் அங்குத் தங்கியிருந்தார். பின் திருநாவுக்கரசரைக் கண்டு வணங்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. அதனால் அவர் திருப்புகலூரை அடைந்தார். அங்கு நாவுக்கரசரும் முருக நாயனாரும் அவரை வரவேற்றனர். திருநீலநக்க நாயனாரும் சிறுத்தொண்டரும் அங்கு சம்பந்தரை வணங்கினர். அவர்கள் அளவளாவி மகிழ்ந்தனர்.

அதன் பிறகு சம்பந்தர் திருநாவுக்கரசருடன் பல பதிகளுக்கும் செல்லலானார். வழக்கம் போல் முத்துப்பல்லக்கில் செல்லவில்லை. நாவுக்கரசர் பக்கத்தில் நடந்து சென்றார். "இறைவர் உமக்கு முத்துப்பல்லக்கைத் தந்தார் ஆதலால் நீங்கள் அதில் அமர்ந்து செல்லுங்கள். நான் பின்னால் வருவேன்" என்றார். அன்றிலிருந்து ஞானசம்பந்தர், அப்பர் முன்னால் சென்றபின், "அவர் எங்குச் சென்றார்?" எனக் கேட்டறிந்து அங்குப் போய்ச் சேர்ந்தார்.

திருவம்பர் நகரை நாவுக்கரசர் அடைந்தார். ஞானசம்பந்தர் அங்கு வந்து சேர்ந்தார். இருவரும் அவ்வூர் மாடக் கோயிலுக்குப் போய் வணங்கினர். அக்கோயில் கோச்செங்கச் சோழரால் கட்டப்பட்டது. ஞானசம்பந்தர் கோச்செங்கச் சோழரைத் தம் பதிகத்துள் சிறப்பித்துப் பாடினார்.

அங்கிருந்து அவ்விருவரும் திருக்கடவூர் சென்றனர். அங்குக் குங்கிலியக் கலய நாயனார் அவர்களை வரவேற்று உபசரித்தார். விருந்தளித்தார். பின் அவரிடம் விடைக் கொண்டு திருவீழிமிழலையை அடைந்தார், ஞானசம்பந்தர். அங்குச் சீர்காழி அந்தணர் வந்து அவரைத் தம் ஊருக்கு வருமாறு வேண்டினர். அவ்வாறு வருவது இறைவர்க்கு விருப்பமில்லை என்று ஞானசம்பந்தர் உரைத்தார்.

அவர் திருவீழிமிழலையில் தங்கியிருந்தபோது பெரிய பஞ்சம் ஏற்பட்டது. இருவரும் இறைவரிடம் வேண்டி அவர் அளித்த படிக்காசினால் பஞ்சத்தைப் போக்கினர்.

இருவரும் திருமறைக்காட்டிற்குச் செல்ல விரும்பிப் பல பதிகளையும் வணங்கியவாறு சென்றனர். அந்தப் பதியில் உள்ள கோயில் கதவு வேதத்தால் ஓதப்பட்டு மூடப் பட்டிருந்தது. பக்கத்தில் உள்ள சிறு வழியாய் மக்கள் உள்ளே சென்று இறைவரை வழிபடுவதாக அமைந்திருந்தது. அப்பர், பதிகத்தைப் பாடிக் கதவைத் திறக்கும்படியாய்ச் செய்தார். சம்பந்தர் அக்கதவு மூடும்படி பாடினார்.

அவ்விருவரும் திருமறைக் காட்டில் இருந்த போது பாண்டிய நாட்டின் அரசமாதேவி மங்கையர்கரசியார் ஞானசம்பந்தரைத்தம்

நகரத்துக்கு வருமாறு வேண்டினார். அங்குச் செல்ல வேண்டா என்று நாவரசர் சம்பந்தரிடம் கூறினார். ஆயினும் சிவபெருமான் அருளால் தீங்கு ஏதும் வராது என்று கூறி, "வேயுறு தோளி பங்கன்" என்ற பதிகத்தைப் பாடினார். ஆகவே ஞானசம்பந்தர் பாண்டிய நாட்டுக்குச் செல்வதை நாவரசர் தடுக்கவில்லை. ஆயினும் தாமும் அங்கு வர விரும்புவதாக நாவுக்கரசர் உரைத்தார். அதனை ஞானசம்பந்தர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவரை வரவேண்டாம் என்று தடுத்து விட்டார்.

திருஞானசம்பந்தர் மதுரைக்குச் செல்லப் புறப்பட்டார். அவ்வளவில் மங்கல வாத்தியங்கள் முழங்கின! சோழ நாட்டுத் தலங்களை வணங்கிய அவர் பாண்டிய நாட்டுத் தலங்களை வணங்கிய வண்ணம் செல்லலானார். அப்போது சமணர்களுக்குத் தீய நிமித்தங்கள் தோன்றின. அவர்களின் மயிற்பீலி, பாய், தடுக்கு முதலியவை விழுந்தன. கை கால்கள் நடுக்கம் கொண்டன. தங்களுக்கு ஏற்பட்ட தீய நிமித்தங்களை மன்னனுக்குத் தெரிவித்தனர்.

அதே சமயத்தில் மங்கையர்கரசியாருக்கும் குலச்சிறை நாயனாருக்கும் நன்னிமித்தங்கள் ஏற்பட்டன. ஞானசம்பந்தர் மதுரையை நெருங்குகின்றார் என்ற செய்தி கிட்டிற்று. மங்கையர்கரசியார் ஞானசம்பந்தரை வரவேற்கும்படி குலச்சிறையார்க்குக் கூறினார்.

குலச்சிறையார் ஞானசம்பந்தரை வரவேற்றார். அரசியாரும் ஞானசம்பந்தரை நேரில் வரவேற்க வேண்டும் என்று எண்ணிக் கோயிலுக்குச் செல்வதாய் மன்னனிடம் கூறிவிட்டுச் சென்றார். கோயிலில் ஓரிடத்தில் நின்று சம்பந்தரை எதிர் நோக்கிய வண்ணம் நின்றார். குலச்சிறையார் ஞானசம்பந்தரைக் கண்டு வணங்கினார். மங்கையர்க்கரசியார் வரவேற்குமாறு கூறியதைக் குலச்சிறையாருக்கு ஞானசம்பந்தர் உரைத்தார். "மங்கையர்கரசியார்க்கும் உமக்கும் இறைவர் அருள் உண்டாகுக" என்று வாழ்த்தினார் சம்பந்தர். பின் சம்பந்தர் ஆலவாய்க்குள் சென்று "மங்கையர்கரசி" எனத்தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி இறைவரை வணங்கி மகிழ்ந்தார். அப்போது மங்கையர்க்கரசியார் அவரைக் கண்டு வணங்கினார். அவர்க்குப் ஞானசம்பந்தப் பிள்ளையார் உபசார மொழிகள் பலவற்றைக் கூறினார். குலச்சிறையார், "இந்நாட்டு மன்னன் சமணக் குழியில் விழுந்துள்ளான். பாண்டிய மக்கள் பெரும்பாலோர் சமணர் ஆயினர்" என்று விண்ணப்பம் செய்தார். அதன்பின் ஆளுடைய பிள்ளையாரை ஞான தேசிகர் மடத்தில் தங்கச் செய்தார்.

ஞானசம்பந்தரின் வருகை சமணர்க்குக் கலக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் மன்னனிடம் சென்றனர். வந்த காரணத்தை மன்னன் அவர்களிடம் வினவினான். அவர்கள் ஞானசம்பந்தர் மதுரைக்கு

வந்திருப்பதையும், வாதத்தில் வெல்ல இருப்பதையும், மதுரை நகரை விட்டுத் துரத்த வேண்டிய இன்றியமையாத காரணத்தையும் கூறினார்கள். மன்னன் "அதற்கு யாது செய்ய வேண்டும்?" என வினவிய போது "அவன் தங்கியுள்ள இடத்தில் மந்திரம் சபித்து தீயை உண்டாக்க வேண்டும் என்றனர். "அப்படியே செய்க!" என்று அவன் அனுமதி தந்தான்.

அவர்கள் சென்ற பின் மன்னன் கவலை கொண்டிருந்தான். அவன் துன்பம் அடைந்துள்ளதன் காரணத்தை மங்கையர்கரசியார் வினவினார். "ஓர் அந்தணச் சிறுவன் சீகாழியினின்று வந்துள்ளன். அவன் சமணரை வாதாடி வெல்ல இருக்கின்றானாம். அவனைக் கண்டதால் அடிகளுக்குக் "கண்டு மூட்டு!" கேட்டதால் எனக்கு "கேட்டு மூட்டு".( கண்டு மூட்டு - கண்டதால் உண்டான தோஷம், கேட்டு மூட்டு - கேட்டதால் வந்த தோஷம் ) இதுவே என் துன்பம்! என்றான் மன்னன். மங்கையர்கரசியார், "நீங்கள் கவலைப்படவேண்டா! வாதத்தில் வெல்வார் பக்கம் சேர்வதே நமக்கு உறுதியாகும் என்றார். பின் அவர் குலச்சிறையாரைப் பார்த்து நிகழ்ந்த செய்தியை உரைத்தார். "சமணர் கொடியர்" பிள்ளையாருக்குத் தீமையைச் செய்வர்! அவருக்குத் தீங்கு நேரின் நாம் உயிர் துறக்க வேண்டும்" என்றார்.

சமணர் மந்திரம் சபித்துச் சம்பந்தர் தங்கியுள்ள மடத்தில் தீயை உண்டாக்க முனைந்தனர். ஆனால் அது பயன் அளிக்கவில்லை. ஆதலால் அம் மடத்துக்கு அவர்கள் தீயை இட்டனர். மடத்தில் தீப்பற்றி எரிந்தது. அதை அறிந்த அடியார்கள் தீயை அணைத்தனர். அதைச் சம்பந்தருக்கு உரைத்தனர். அவர் பெரிதும் வருந்தினார். "செய்யனே" எனத் தொடங்கும் பதிகத்தில் "இத் தீ மெல்லச் சென்று பாண்டியற்காகுக" என்னும் பொருள் அமையப் பாடினார். அந்தத் தீ மெல்லச் சென்று பாண்டியனை அடைந்தது. சமணர் செய்த கொடுஞ் செயல் ஞானசம்பந்தருக்கு ஊறு ஏற்படுத்தவில்லை என்பதை அறிந்து மங்கையர்கரசியாரும் குலச்சிறையாரும் ஆறுதல் அடைந்தனர்.

மன்னனுக்கு வெப்பு நோய் உண்டாயிற்று என்ற செய்தி மங்கையர்கரசியாருக்கும் குலச்சிறையாருக்கும் எட்டியது. அவனது உடல் வெப்பம் நீங்க வைத்தியர்கள் தமக்குத் தெரிந்த மருத்துவத்தையெல்லாம் செய்தனர். நோய் மிகுந்ததே அன்றிக் குறையவில்லை. சமணர் தாம் செய்த செயலால் இவ்வாறு நேர்ந்ததோ என்ற ஐயம் கொண்டனர். அவர்கள் மன்னனை அடைந்து மயிற்பீலியால் தடவினர். அம் மயிற்பீலி எரிந்தது. தம் கமண்டலத்தில் உள்ள நீரைத் தெளித்தனர். "அருகனே அருகனே! இவனைக் காப்பாய்!" என்றனர். அந்நீர் நெருப்பில் நெய் சொரிந்தாற் போல் ஆயிற்று. "மன்னன் நீங்கள் என்னருகில் வர வேண்டா! ஓடிப் போங்கள்! என்றான். சமணர் செய்த செயலால்தான் வெப்பு நோய் உண்டாயிற்று. இதற்கு மருந்து சம்பந்தரின் அருள். அவரது நோக்குப்

பட்டால் இது ஒழியும்!" என்று கூறினர். ஞானசம்பந்தர் என்ற பெயரைக் கேட்ட அளவில் மன்னனுக்குச் சோர்வு குறைந்தது. "ஞானசம்பந்தர் இங்குவர, இந்நோய் தீருமானால், அவரது சமயமே உண்மைஎனக் கொள்வேன்! என்றான் மன்னன். "நான் அடைந்த நோயை ஒழித்து வெற்றி கண்டவர் பக்கமே சேர்வேன். அவரை வரவழைக்க வழி உண்டானால் வரவழையுங்கள்!" என்றும் அவன் சொன்னான்.

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் பெரு மகிழ்ச்சி அடைந்தனர். அவ்விருவரும்போய் ஞானசம்பந்தரை அழைத்தனர். அவர் அவர்களுக்கு ஆறுதல் கூறி "எல்லாரும் காணச் சமணரை வெல்வேன்" என்று புறப்பட்டார். இறைவரை "வேதவேள்வியை" என்ற பதிகத்தைப் பாடி வணங்கிப் பல்லக்கில் புறப்பட்டார். அரண்மனையை அடைந்தார். மன்னனின் தலைப்பக்கத்தில் இடப்பட்டிருந்த இருக்கையில் சம்பந்தர் அமர்ந்தார். பாண்டியனின் மேனியைச் சம்பந்தர் தம் கண் கொள்ளப் பார்த்தார். அப்போதே வெப்பு நோய் சற்று நீங்கியது.

அப்போது சமணர் அவரைச் சூழ்ந்து வாதுக்கு அழைத்தனர். அப்போது மன்னன் சமணரை நோக்கி, "நீங்களும் இவரும் என் நோயைத் தீருங்கள். பின் வாதிடலாம்!" என்றான். சம்பந்தர் மங்கையர்க்கரசியாரை நோக்கி "நீவிர் என்னைச் சிறுவன் என்று அஞ்ச வேண்டியதில்லை! நான் சமணருக்கு எளியன் அல்லன்" என்று "மானினேர் விழி" என்ற பதிகத்தைப் பாடினார். "நீங்கள் இருவரும் வெப்பு நோயைத் தீருங்கள். தீர்த்தவரே வாதில் வென்றவர்!" என்று மன்னன் கூறச் சமணர் இடப்பக்கத்து வெப்பு நோயைத் தாம் தீர்ப்பதாகக் கூறினர். ஆனால் அவர்கள் மந்திரித்து மயிற்பீலியால் இடப்பக்கம் தடவிய போது நோய் குறையவில்லை, மிகுந்தது! சம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்று பதிகம் பாடித் திருநீற்றை வலப்பக்கத்தில் தடவினார். அப்பக்கம் நோய் நீங்கியது குளிர்ந்தது. அந்தப்பக்க வெப்பம் இடப்பக்க போய் மிக்கது. அவனது உடல் நீரும் வெப்பமும் போலாகியது. சமணர் தோற்றனர் ஆதலால் மன்னன் "ஓடிப்போங்கள்" என்றான். சம்பந்தரைத் தன்வெப்பு நோய் முழுவதையும் போக்குமாறு வேண்டினான். சம்பந்தர் திருநீற்றை இடப்பக்கத்தில் பூசினார். அதனால் நோய் அப்போதே நீங்கியது. மன்னனும் குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் மகிழ்ந்தனர்.

சமணர் சம்பந்தரை வாதுக்கு அழைத்தனர். சொல்லால் அவரைவெல்ல இயலாது என்பதை அவர்கள் உணர்ந்தனர். அனல் வாதம், புனல் வாதம் நிகழ்த்தவேண்டும் என்றனர். தம் சமய உண்மையை எழுதித் தீயில் இட்டால் எரியாமல் இருப்பதும், நீரில் இட்டால் எதிர்த்துச் செல்வதும் ஆகியது எதுவோ அதுவே உண்மை சமயம் என்று முடிவு செய்தனர். சம்பந்தர் தம் திருநள்ளாற்றுப் பதிகமான "போகமார்த்த" எனத்தொடங்கும் பதிகத்தையுடைய ஏட்டைத் தீயில் இட்டார். அது

எரியாமல் இருந்தது! அது மட்டுமன்று, பச்சையாகவும் இருந்தது. சமணர் இட்ட ஓலை தீயில் இட்ட பஞ்சைப் போல் எரிந்தது. தீயில் தாம் இட்ட ஏட்டை எடுத்தார் ஞானசம்பந்தர். சமணர் தாம் இட்ட ஏட்டை எடுக்க இயலாது வருந்தினர்.

பின்னரும் வாதம் நிகழ்த்த வேண்டும் என்றனர் சமணர். உண்மை பொருளை எழுதி ஆற்று நீரில் இட வேண்டும். அது ஆற்று நீர் ஓட்டத்துடன் ஓடாது இட்ட இடத்திலேயே இருக்க வேண்டும். அவ்வாறு எச்சமய உண்மையையுடைய ஏடு இருக்கின்றதோ அதுவே உண்மை சமயமாகும்!" என்றனர் சமணர். அப்போது குலச்சிறையார் "இதைச் செய்வதற்கு முன் தோற்றவர் இன்னது செய்ய வேண்டும் என்று முடிவு செய்த பின்னரே இது நிகழ்தல் வேண்டும்" என்றார். "நாங்கள் வாதத்தில் தோற்றால் இம்மன்னனே எங்களைக் கழுவில் ஏற்றட்டும்" என்றனர் சமணர்.

மன்னனுக்கும் அதற்கு இசைந்தான். யாவரும் வைகையாற்றுக்குச் சென்றனர். நகர மக்களும் அங்கு வந்து கூடினர். "நீங்களும் சம்பந்தரும் வைகை நீரில் ஏட்டை விடுங்கள்!" என்றான் மன்னன். சமணர் "அத்திநாத்தி" என்று எழுதினர். (அத்திநாத்தி - கடவுள் உண்டு இல்லை என்று பொருள்படும்) அந்த ஏட்டை வைகையாற்றில் சமணர் இட்டனர். அது கடலை நோக்கி விரைந்து ஓடிற்று. அந்த ஏட்டைத் தேடி பின்னால் சமணர் ஓடினர். ஏடு நெடுந்தொலைவு சென்று விட்டது. ஆதலால் சமணர் ஓடினர். ஏடு நெடுந்தொலைவு சென்று விட்டது. ஆதலால் சமணர் திரும்பி ஞானசம்பந்தரிடம் வந்து அவரது ஏட்டை விடும்படியுரைத்தனர். சம்பந்தர் "வாழ்க அந்தணர்" என்ற பதிகம் எழுதப்பட்ட ஏட்டை இட்டார். அந்த ஏடு இதுவே மெய்ப்பொருள் என்று காட்டிய வண்ணம் நீரை எதிர்த்துச் சென்றது. அதில் "வேந்தனும் ஓங்குக" என்று எழுதப் பட்டிருந்ததால் பாண்டியனின் கூனானது நிமிர்ந்தது. அதை எடுக்கும் பொருட்டுக் குதிரை மீது ஏறிக் குலச்சிறையார் சென்றார். அந்த ஏடு நீரில் தங்கும் பொருட்டு "வன்னியும்" என்று தொடங்கும் பதிகம் பாடினார். அப்போது அந்த ஏடு சிவாலயத்திற்கு பக்கத்தில் நீர் நடுவில் நின்றது. அதை எடுத்துக் கொண்டார் குலச்சிறையார். சம்பந்தரிடம் வந்து அவரை வணங்கினார். யாவரும் வியந்தனர்.

மன்னன் வாதத்தில் தோற்ற சமணர்களைக் கழுவில் ஏற்றும்படி குலச்சிறையாருக்கு உரைத்தான். ஞானசம்பந்தர் திருநீற்றைப் பாண்டியனுக்குத் தர அதனை அவன் வாங்கி அணிந்து கொண்டான். சைவன் ஆனான். மற்ற மக்களும் திருநீற்றை அணிந்து கொண்டனர். இங்ஙணம் சமணம் தாழ்ந்தது. சைவம் உயர்ந்தது! பிள்ளையாரின் புகழ் எங்கும் பரந்தது! ஞானசம்பந்தர் பின்னர் ஆலவாய்க்குச் சென்று இறைவரை வணங்கி "வீடலால வாயிலாய்" என்று திருப்பதிகம்

பாடினார். மன்னன் தம் பேதைமையப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று இறைவனிடம் வேண்டினான்.

ஞானசம்பந்தர் நிகழ்த்திய இந்த அற்புதத்தைக் செவியேற்ற சிவபாத இருதயர் மதுரைக்கு வந்தார். ஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்தில் அவரைக்கண்டார். அவர் ஞானசம்பந்தரை வணங்க, சம்பந்தரும் தம் தந்தையை வணங்கினார். சீகாழி தோணியப்பரை நினைந்து "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற பதிகத்தைப் பாடினார்.

சில நாட்கள் ஆனபின்பு சம்பந்தர் பாண்டியன் முதலியவர் உடன் வரச் சென்று திருப்பரங்குன்றம் முதலான தலங்களைப் பதிகம் பாடி வணங்கினர். பின்பு இராமேச்சரத்தை அடைந்து அங்குள் இறைவரை வணங்கிப் பதிகம் பாடி அங்கிருந்த வண்ணமே ஈழத்தில் உள்ள திருக்கோணமலை, திருக்கேதீச்சரத்தை வணங்கிப் பதிகம் பாடினார். சிலநாட்கள் இராமேச்சரத்தில் தங்கிய பின்பு அதனை விடுத்துத் திருவாடனை திருப்புனவாயில் என்பனவற்றை வணங்கி குலச்சிறையாரின் ஊரான மணமேற்குடியினை அடைந்து அங்குத் தங்கியிருந்தார். பின்பு தம் சோழ நாட்டுக்குப் புறப்பட எண்ணினார். மங்கையர்கரசியாரும் குலச்சிறையாரும் உடன் வர விரும்ப அவர்களை அங்கேயே தங்கியிருக்கும்படி கூறிவிட்டுப் புறப்பட்டார்.

சோழநாட்டில் பல பதிகளை வணங்கி வந்தவர் காவிரியில் நீர் நிலை கொள்ளாமல் ஓடியதைக் கண்டார். ஓட்டுபவர் ஓட்ட இயலாமல் ஓடத்தை விட்டுச் சென்றிருந்தனர். எதிரிலே திருக்கொள்ளம்புத்தூர். அங்குச் சென்று இறைவனை வணங்க எண்ணி அடியார்களை ஓடத்தில் ஏறுமாறு செய்து "கொட்டமே கமழும்" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். இறைவன் அருளால் ஓடம் மறுகரை அடைந்தது. இறைவனை வணங்கிச் சிலநாட்கள் அங்குத் தங்கியிருந்து பின் திருநள்ளாற்றை அடைந்து, "பாடக மெல்லடி" எனத்தொடங்கும் பதிகம் பாடினார். அங்கேயும் சில நாட்கள் தங்கியபின் புறப்பட்டுத் திருத்தெளிச்சேரியை அடைந்தார். போதிமங்கை என்ற ஊரில் பௌத்தர் வாழ்ந்தனர். அவ்வூரை நெருங்கச் சிவனடியார்கள் ஆரவாரம் செய்தனர்.

சாரிபுத்திரன் என்பவன் சம்பந்தருடன் வாதம் செய்ய வந்தான். சம்பந்தருடன் வந்த சம்பந்த சரணாலயர் தம்மை வாதிட அனுமதிக்க வேண்டினார். ஞானசம்பந்தர் அவ்வாறே அனுமதித்தார். சாரிபுத்திரன் வாதத்தில் சம்பந்த சரணாலயரிடத்தில் தோற்றான். அதனால் அந்தப் பௌத்தர்கள் எல்லாம் சைவச் சமயத்தை சார்ந்தனர்.

இது நிகழ்ந்த பின்பு சம்பந்தர் திருக்கடவூருக்குச் சென்றார். அங்கிருக்கும்போது நாவுக்கரசர் திருபூந்துருத்தியில் இருப்பதை அறிந்தார். ஆதலால் அவரைக் காணச் சென்றார். நாவுக்கரசர் ஞானசம்பந்தரின் வருகைப்பற்றி அறிந்து ஒருவரும் அறியாது கூட்டத்துள் மறைந்து சென்று ஞானசம்பந்தரின் பல்லக்கை சுமக்கலானார். திருப்பூந்துருத்தி நெருங்கியதும் "நாவுக்கரசர் எங்கு இருக்கின்றார்?" என்று ஞானசம்பந்தர் வினவினார். "அடியேன் இங்குள்ளேன்!" தங்கள் சிவிகையை தாங்கிவரும் பேறு பெற்றேன்" என்று விடைபகர்ந்தார். இந்தச் சொல்லைக் கேட்டு அஞ்சிய சம்பந்தர் பல்லக்கினின்று இறங்கி "இவ்வாறு செய்யலாமோ?" என்று கூறி நாவுக்கரசரை வணங்க, அவரும் சம்பந்தரை வணங்கினார். அக்காட்சியை பார்த்த அனைவரும் அவ்விருவரையும் வணங்கித் துதித்தனர்.

இருவரும் திருபூந்துருத்திக் கோயிலுக்குள் சென்று இறைவரை வணங்கினர். பாண்டிய நாட்டில் நிகழ்ந்தவற்றை ஞானசம்பந்தர் நாவுக்கரசருக்கு விளக்கினார். நாவுக்கரசர் சம்பந்தருக்குத் தாம் தொண்டை நாடு சென்றதைப் பற்றியும் ஏகாம்பரரை வணங்கியதைப் பற்றியும் விளக்கிக் கூறினார். பின்பு ஞானசம்பந்தர் தம் சீர்காழிக்குச் சென்று தோனியப்பரை வணங்கினார். "உற்றுமை சேர்வது மெய்யினையே" என்ற பதிகத்தைப் பாடினார். தம்முடன் வந்த திருநீலகண்ட யாழ்பாணர்க்கும் அவருடைய மனைவியார் மதங்க சூளாமணியாருக்கும் விடை தந்து அனுப்பினார். சில நாட்கள் சென்ற பின் தொண்டை நாட்டுக்குச் செல்ல அவர் புறப்பட்டார். அவருடைய தந்தையார் உடன் வருவது வழக்கம். அவ்வாறு வருவதை அவர் தடுத்து நிறுத்தி தாம் மட்டும் தமியராய்ப் புறப்பட்டார். ஆயின் அடியார் வழக்கம் போல் உடன் புறப்பட்டனர்.

தில்லை, திருமாணிக்குழி, திருப்பாதிரிப் புலியூர் சென்று திருவதிகையை அடைந்தார். அங்கு பதிகம் பாடித் திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலான தலங்களை வணங்கித் திருவண்ணாமலைக்கு வந்தார். அம்மலை எம்பெருமான் திருவுருவம் போல் காட்சித் தந்தது. உடனே "உண்ணாமுலை உமையாளொடு" என்ற பதிகத்தைப் பாடினார். திருவண்ணாமலையினின்று வடதிசை நோக்கித் தொண்டை நாட்டுத் திருவோத்தூரை அடைந்தார். இறைவரை வணங்கிய வண்ணம் அங்குச் சிலநாட்கள் தங்கியிருந்தார். பதிகம் பாடினார்.

ஒருநாள் ஓர் அடியார் அவரிடம் வந்து தாம் சங்கரனுக்காக வைத்த பனைமரங்கள் ஆண்பனைகளாய் உள்ளன என்றும் இது குறித்துச் சமணர் இகழ்ந்து பேசுகின்றனர் என்றும் உரைத்தார். "அந்த ஆண் பனைகள் காய்க்குமாறு தாங்கள் அருள் செய்ய வேண்டும்" என வேண்டினார். ஞானசம்பந்தர் அவர்க்காக இரங்கி "பூத்தேர்ந்தாயன" எனத்தொடங்கும்

பதிகத்தைப் பாடினார் அவர் பதிகத்தைப் பாடியவுடனே அப்பனை மரங்கள் காய்களுடன் குலுங்கின. கண்டவர் உள்ளங்கள் களித்தன.

பின்னர்த் திருமாகறல், திருக்குரங்கணில்முட்டம் என்னும் பதிகளை வணங்கிக் காஞ்சிக்கு அருகில் வந்தார். அந்நகரினர் நகரை அணி செய்து அவரை வரவேற்றனர்.

ஆளுடைய பிள்ளையாரான சம்பந்தர் ஏகம்பவாணரின் கோயிலுக்குள் சென்று பணிந்தார், ஆடினார், பாடினார். அவரது உடல் புளகாகிதம் அடைந்தது . பின் சில நாட்கள் தங்கியிருந்தார். அவர் அங்கிருந்தபோது பல பதிகங்களைப் பாடினார்.

பின் திருமாற்பேறு, திருவல்லம், திருவிற்கோலம், தக்கோலம், என்பனவற்றை வணங்கித் திருவாலங்காட்டை அடைந்தார். அப்பதி காரைக்கால் அம்மையார் தலையினால் நடந்த பதி. அதனால் அதை மிக்க அஞ்சி அப்பதியின் அருகே அன்றிரவு தங்கினார். "அன்பனே! என்னைப் பாட மறந்தனையோ !" என இறைவர் அவரது கனவில் தோன்றி வினவினார். ஞானசம்பந்தர் கண்விழித்துத் "துஞ்ச வருவாரும்" என்ற பதிகத்தைத் தொடங்கிப் பாடினார்.

அங்கிருந்த பல பதிகளை வணங்கிக் திருவொற்றியூரை அடைந்தார். திருவொற்றி இறைவர்க்கு பாமாலை சாத்தி வணங்கினார்.

அக்காலத்தில் மயிலையில் "சிவநேசர்" என்ற பெருஞ் செல்வர் வாழந்திருந்தார். அவர் திருஞானசம்பந்தரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரிடம் அன்பு பூண்டிருந்தார். அவர்க்குத் திருமகள் போல் ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் பூம்பாவை அவளையும் செல்வத்தையும் திருஞானசம்பந்தருக்கு அளித்து விட்டதாக சிவநேசர் ஒருமுறை சுற்றத்தாரிடம் உரைத்தார். அவள் கன்னி மாடத்தில் இருந்தாள் ஒருமுறை பூப்பறிக்கச் சோலைக்குள் சென்றாள். ஒரு பாம்பு அவளைத் தீண்டியது. அவளது உடலை விட்டு உயிர நீங்கியது. மருத்துவத்தால் பயன் இல்லாமல் போயிற்று. உறவினர் அழுதனர். சிவநேசர் ஒருவாறு தேறி, இவள் ஞானசம்பந்தருக்கு உரியவள் என்றதாள் இவளது உடலை எரித்து அவர் வரும் வரை எலும்பையும் சாம்பலையும் பாதுகாத்து வைப்பேன் என்று அவளுடைய உடலை எரித்து எலும்பையும் சாம்பலையும் குடத்தில் இட்டுக் கன்னி மாடத்தில் ஆடை அணிகள் அணிவித்துப் பஞ்சணை மீது வைத்திருந்தார். நாள்தோறும் அதற்கு மலர் மாலைகள் சாத்தி வந்தார்.

இங்ஙணம் நிகழும் நாளில் ஞானசம்பந்தர் திருவொற்றியூர் வந்திருக்கின்றார் என்ற செய்தியைக் சிவநேசர் அறிந்து அவரைக் காணச் செல்லலானார். அப்போது ஞானசம்பந்தரும் மயிலாப்பூருக்கு வந்து கொண்டிருந்தார். சிவநேசர் அவரை எதிர் கொண்டு வணங்கினார். சிவனடியார்கள் சிவநேசர் பற்றிக் கூறக்கேட்டார். ஞானசம்பந்தர். அவர் மகிழ்ந்து மயிலையை அடைந்தார். கபாலீச்சுவரரை வணங்கி

ஞானசம்பந்தர் வெளியே வந்தார். சிவநேசரைப் பார்த்துப் பூம்பாவையின் எலும்புடைய குடத்தைக் கொணரும்படியாய்ச் சொன்னார். சிவநேசர் குடத்தைக் கபாலீச்சுவரர் கோயிலின் முன்வைத்தார்.

ஞான சம்பந்தர் "மட்டிட்ட புன்னையும்" என்ற தொடக்கம் கொண்ட பதிகத்தைப் பாடினார். பூம்பாவை வெளிப்பட்டார்.

அழகின் உருவாய் வெளிப்பட்ட தம் மகளைப் பார்த்துச் சிவநேசர் மகிழ்ந்தார். ஞானசம்பந்தரை நோக்கி "இவளை மணம் செய்து கொள்ள வேண்டும்" என வேண்டினார். "நீவிர் பெற்ற மகள் இறந்த பின்பு இறைவரின் அருளால் உயிர் பெறுமாறு யான் செய்தேன். ஆதலால் தங்கள் வார்த்தை பொருந்தாது என்றார் ஞானசம்பந்தர். அது கேட்ட சிவநேசர் பெரிதும் வருந்தினார். அவரை ஞானசம்பந்தர் தேற்றினார். அவள் சில காலம் வாழ்ந்து பின் சிவபெருமானை அடைந்தாள்.

மயிலையில் சில நாட்கள் சம்பந்தர் தங்கியிருந்தார். பின் சிவநேசரிடம் விடைப் பெற்றுத் திருவான்மியூர், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்றம், அச்சிறுப்பாக்கம், திருவரசிலி, பனங்காட்டூர் முதலான பதிகளை வணங்கித் தில்லையை அடைந்தார். அங்கு அவர் இருப்பதை அறிந்த சிவபாத இருதயரும் மற்ற அந்தணரும் வந்து தில்லையை அடைந்தனர். தில்லை அம்பலவன் தாளை வணங்கினார்.

பின் ஞானசம்பந்தர் சீகாழிக்கு சென்றார்.

ஞானசம்பந்தருக்கு மணப்பருவம் வந்தது. அவருடைய தந்தையார் அவருக்குத் திருமணம் செய்ய எண்ணினார். தம் எண்ணத்தைச் சம்பந்தரிடம் உரைத்தார். அவர் அதனை ஏற்காது மறுத்தார். "இவ்வுலகத்தில் வைதிக சமயத்தை உயர்த்தினீர். அதனால் வேத முறைப்படி திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்று அந்தணர் உரைத்தனர். ஞானசம்பந்தர் அதற்கு உடன்பட்டார். எனவே திருநல்லூரில் இருக்கும் அந்தணர்களுள் ஒருவரான "நம்பாண்டார் நம்பி" என்பவரின் மகளை மணம் பேசி முடித்தனர். திருமணத்துக்குரிய நான் குறிக்கப்பட்டது

நல்ல நேரத்தில் ஞானசம்பந்தர் தோணியப்பரை வணங்கிப் திருநல்லூருக்குப் புறப்பட்டார். அங்குள்ள பெருமணம் என்ற கோயிலுக்குள் போய் இறைவரை வணங்கி வெளியே வந்து ஒரு மடத்துள் தங்கினார்.

அங்கு அவரைத் திருமஞ்சன நீராட்டினர். அழகிய ஆடையை உடுத்து மணத்துக்குரிய கோலம் பூண்டு திருமண மண்டபத்தை அவர் அடைந்தார். அங்கு நம்பாண்டார் நம்பி சம்பந்தரை இறைவராகப் பாவித்து அவரது திருவடிகளை விளக்கினார். விளக்கிய புனித நீரைத் தம் தலைமீது தாங்கினார். சுற்றத்தார் மேலும் தெளித்தார். "என்னுடைய

மகளை ஞானசம்பந்தருக்குத் தந்தேன்" என்றார். மணமகளை அழைத்து வந்து மணமகனுக்குப் பக்கத்தில் இருத்தினர்.

அக்கினியை வலம் வந்த சம்பந்தர் "இந்த இல்லற ஒழுக்கம் எனக்கு வந்ததே! நான் இவளுடன் சிவபெருமானின் திருவடியை அடைவேன்!" என எண்ணி எல்லாரும் உடன் வர, மனைவியுடன் போய் பெருமணம் என்ற கோயிலுக்குள் புகுந்தார். தம்முடன் வந்த யாவரும் பாசமறுத்து வீடு பெறுதல் வேண்டும் என அவர் எண்ணினார். "கல்லூர் பெருமணம்" எனத் தொடங்கிப் பதிகத்தைப் பாடினார். அப்போது இறைவர் "நீயும் நின் மணத்திற்கு வந்த யாவரும் என் சோதியில் புகுங்கள்!" என்று கூறியருளினார். அப்போது அவர் சோதிலிங்க வடிவமாய்த் தோன்றினார். அதனுள் ஒரு வாயில் இருந்தது. ஞான சம்பந்தர் "காதலாகி" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி, "இந்திருமணத்திற்கு வந்தவர் அனைவரும் இந்தப் பிறவி நீங்க இதனுள் புகுங்கள்!" என்றார். பிறவி நோய் நீங்க அடைவரும் அந்தப் பேரொளியுள் கலந்தனர்.

திருநீலநக்க நாயனார், முருக நாயனார், சிவபாத இருதயர், நம்பாண்டார் நம்பி, திருநீலகண்ட யாழ்ப்பாணர், அம் மணத்துக்கு வந்த மற்றவர்கள், பல்லக்குத் தாங்கி வந்தவர் முதலிய யாவரும் அப்பேரொளியுள் புக்கனர். பின்பு தம் மனைவியின் கையைப்பற்றிய ஞான சம்பந்தர் அப்பேரொளியுள் புகுந்தார். அப்பேரொளி மறைந்தது. பழையபடி அக்கோயில் தோற்றம் அளித்தது!.

**வரலாற்றுக் குறிப்பு**

| | |
|---|---|
| பிறந்த ஊர் | சீர்காழி |
| நாடு | சோழநாடு |
| தாய் | பகவதியார் |
| தந்தை | சிவபாத இருதயர் |
| கோத்திரம் | கவுணியர் |
| குலம் | வைதிக பிராமணர் |
| மதம் | சைவம் |
| காலம் | 7ம் நூற்றாண்டு |
| வேறு பெயர்கள் | புகலியர் கோன், புகலி வேந்தன், காழியர் கோன், காழிவேந்தன், ஆளுடைய பிள்ளை, பரசமய கோளரி |
| மனைவி | சொக்கியார் |
| சமகால அரசன் | கூன்பாண்டியன் |
| முத்தி பெற்ற ஊர் | ஆச்சாள்புரம் |
| வயது | 16 |
| குருபூசை நட்சத்திரம் | வைகாசி மூலம் |
| பாடிய பாடல்கள் | 1,2,3ம் திருமுறைகள் |
| மொத்த பதிகங்கள் | 378 |
| மொத்த பாடல்கள் | 4158 |
| பாடிய தமிழ் | கொஞ்சு தமிழ் |
| வழிபட்ட நெறி | மகன்மை நெறி |

## 4.2 திருநாவுக்கரசு நாயனார்

திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூரில் புகழனார் என்பவருக்கும் மாதினியாருக்கும் மகனாகத் திருநாவுக்கரசர் தோன்றினார். அத்தம்பதியருக்கு முதலில் தோன்றியது பெண்குழந்தை. அதற்குத் “ திலகவதியார்” எனப் பெயர் சூட்டினர். திருநாவுக்கரசின் இளமைப் பெயர் “ மருள் நீக்கியார்” .

மருள் நீக்கியார் கற்க வேண்டுவன்வற்றைப் பழுதின்றிக் கற்றார். கலைகள் பல அவர்பால் தழைத்தன.

கலிப்பகையார் என்பவர் திலகவதியாரை மணக்க விரும்பினார். அவர் மன்னரின் படைத்தலைவர். வீரத்தில் பக்தி பூண்டவர். அவருக்குத் தம் மகளைத் தருவதில் திலகவதியாரின் பெற்றோர் பெரு விருப்புடையராய் இருந்தனர். ஆனால் மன்னருக்காகப் போர்மேல் சென்ற கலிப்பகையார் பலரை விண்ணுலகத்திற்கு அனுப்பினார். ஆயினும் போர்க்களத்தில் அவர் உயிர்விட நேர்ந்த்து. அவர் போர் செய்யச் சென்றிருந்தபோது புகழனார் நோயால் வருத்தமுற்று இறந்தார். அவர் இறந்தபின் வாழ விரும்பாத மனைவி மாதினியாரும் உயிர் விட்டார்.

கலிப்பகையார் இறந்ததைத் திலகவதியார் செவியுற்றார். திடுக்கிட்டார். தந்தையையும் தாயையும் இழந்தார். மணக்க இருந்த கலிப்பகையாரையும் இழந்தார். அதனால் திலகவதியார் தாமும் உயிர் துறக்க எண்ணினார். ஆனால் தம்பியிருக்கின்றாரே! அவருக்காக வாழ்ந்தாக வேண்டுமே என எண்ணி அம்முயற்சியைக் கைவிட்டார்.

மருள் நீக்கியார் உலக நிலையாமையை உணர்ந்தார். எனவே உலகப்பற்றைத் துறந்து அறச் செயல்கள் பல செய்யலானார். பின் பாடலி புத்திரம் சென்றார். அங்குச் சமணர் பள்ளியிலிருந்து அந்தச் சமண சமயமே வீட்டு நெறி அளிப்பது என அதில் புகுந்தார். அச்சமய உண்மைகளைக் கற்று வல்லவராய் விளங்கியதால் அவரைத் தம் சமயத் தலைவராகக் சமணர் ஏற்றுக் கொண்டனர். அவருக்குத் “ தருமசேனர்” என்ற மேலான பட்டப் பெயரையும் சூட்டினர்.

திலகவதியார் தம் தம்பியாரின் போக்கை உணர்ந்து வருந்தி இறைவனிடம் தம்பியைச் சமண சம்யத்தினின்று மீட்டுத்தரும்படி

வேண்டிக் கொண்டார். இறைவன் அவர் கனவில் தோன்றிச் சூலை நோய் தந்து ஆட்கொள்வதாய்க் கூறினார்.

சிவபெருமான், தருமசேனருக்குச் சூலை நோயைத் தந்தார். பெரிதும் வருத்தும் அந்நோயைச் சமணர்களால் போக்க இயலவில்லை. ஆதலால் நோயுற்று வருந்தும் நிலையைத் தம் தமக்கையாருக்குச் சொல்லி வரும்படி ஆட்களை ஏவினார், தருமசேனர். தமக்கையார் தம் தம்பியைத் தமது இருப்பிடத்துக்கு வரும்படி சொல்லியனுப்பினார்.

தருமசேனர் திலகவதியாரைக் கண்டு அடிகளில் விழுந்து வணங்கினார். அவர் திருநீற்றைத் தந்து திருவதிகை வீரட்டானக் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கே நாவுக்கரசர் பாடல்பாடும் அருள் பெற்றுத் தம் நோய் நீங்கிடக் “ கூற்றாயினவாறு” எனத் தொடக்குகின்ற பதிகத்தைப் பாடினார். கொடிய சூலை நோய் அவரை விட்டு நீங்கியது. எம்பெருமான், “ நீ அரிய பதிகம் பாடினாய். ஆதலால் உனக்கு நாவுக்கரசு என்ற பெயர் வழங்குவதாகுக!” என்று அருள்பாலித்தார்.

இறைவனின் கருணை திருநாவுக்கரசருக்கு வியப்பையூட்டியது. மனம் வாக்கு காயம் என்னும் மூன்றாலும் தூயராய்த் தொண்டு செய்யத் தொடங்கினார். இதைச் சமணர்கள் அறிந்தனர். சமண சமயத்தை விடுத்து சைவ சமயம் சென்ற திருநாவுக்கரசரைப் பற்றிப் பல்லவ மன்னனிடம் சென்று குறை கூறினர். அவர்க்குத் தக்க தண்டனை தரவேண்டும் என்று உரைத்தனர். அதனால் அம்மன்னன் நாவுக்கரசரை அழைத்து வரும்படி தக்க ஆட்களை அனுப்பினான். அவர்கள் கூற்றைக் கேட்ட நாவுக்கரசர் “ நாமார்க்கும் குடியல்லோம்” என்ற மறுமாற்றத் திருதாண்டகத்தைப் பாடி, வர மறுத்தார். பின் சிவபெருமான் அருள் தமக்கு இருப்பதால் அஞ்ச வேண்டியதில்லை எனத் தெளிந்து அமைச்சருடன் பல்லவ மன்னனிடம் சென்றார். மன்னன் அவரை நீற்றறையில் இட்டுத் கதவைப் பூட்டினார். உள்ளே இடப்பட்ட அவர் இறைவனை நினைத்து “ மாசில் வீணையும்” எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அந்த நீற்றறை இறைவனின் திருவடி நிழலாக எண்ணிய அவர்க்கு வீணையின் இசையும் சந்திரனும் தென்றலும் இளவேனிலும் போல் குளிர்ந்து விளங்கியது.

ஏழுநாட்கள் சென்றபின் அந்த நீற்றறையைச் சமணர் திறந்து பார்க்க, அவர் ஊறு இன்றி இருந்ததைக் கண்டனர். அவர் தம்மிடத்தில் கற்ற மந்ததிரத்தால் துன்பமின்றித் தப்பித்தார் என்று கூறி மேலும் வேறு தண்டனையை அளிக்க வேண்டும் என்றனர். அவர்க்கு நஞ்சு ஊட்டுவது என்று முடிவு செய்தனர். நஞ்சுண்ட அவரை யானையின் காலில் இட்டுக் கொல்லவேண்டும் என முடிவு செய்தனர். யானை அவர் எதிரே வந்தபோது “ சுண்ணவெண்” எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். யானை அவரை வணங்கிவிட்டுச் சென்று தம்மை ஏவியரைக் கொன்றது.

அதுகண்ட சமணர் மேலும் அச்சம்கொண்டு அரசனிடம் அவரைக் கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்ச வேண்டும் என்றனர். கருங்கல்லில் கட்டப்பட்டுக் கடலில் அவர் விடப்பட்டார். அப்போது அப்பெருமான் “ சொற்றுணை” எனத் தொடங்குகின்ற பதிகத்தைப் பாடினார். “ நமச்சிவாயம்” அவரைக் கரைச் சேர்த்தது. கரையேற விட்ட குப்பம் என்ற இடத்தில் அவர் கரையேறினார். திருப்பாதிரிப் புலியூருக்குச் சென்று இறைவர் திருமுன்பு “ ஈன்றாளுமாய்” எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார்.

நாவுக்கரசரின் ஆற்றலையும் அதற்குக் காரணமான சைவ மேம்பாட்டையும் மன்னன் உணர்ந்தான். சைவன் ஆனான். கேடு செய்த சமணர் அடங்கினர். மன்னன் நாவுகரசரிடம் வந்து வணங்கித் தம் குற்றங்களைப் பொறுக்க வேண்டும் என்றான். சமணரின் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துவிட்டு அவற்றின் கற்களைக் கொண்டு சென்று திருவதிகைப்பதியில் சிவபெருமானுக்குக் “ குணதர வீச்சரம்” என்ற கோயிலை எடுப்பித்தான்.

நாவுக்கரசர் அதன்பின் திருவெண்ணெய் நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய பதிகளுக்குச் சென்று இறைவரை வணங்கினார். அவர் திருத்தூங்கானை மாடம் என்ற பதியுள் சென்று இறைவனை வணங்கிச் “சமண் சமயத்துடன் தொடர்புடைய உடலுடன் நான் வாழப்பொறேன். நான் உயிர் வாழ உம் முத்திரையான சூலமும் காளையும் ஆகிய சின்னத்தை என் தோளில் பொருத்திடல் வேண்டும்!” என்று வேண்டினார். ஒரு சிவ பூதம் ஒருவரும் அறியாமல் வந்து

அவருடைய தோளில் சூலம், காளை ஆகிய சின்னங்களை பொறித்துச்சென்றது.

அதன்பின் நாவுக்கரசர் திருவரத்துறை, திருமுதுகுன்றம் முதலான தலங்களை வணங்கிச் சிதம்பரத்தை அடைந்தார். தில்லைப் பொன்னம்பலத்தில் இறைவனை வணங்கினார். அங்கு உழவாரப் பணியைச் செய்தார். பின் திருவேட்களம் சென்று இறைவரைப் பாடித் திருக்கழிப்பாலையை அடைந்தார். அங்கு அவர் “ வனபவளவாய்” எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். பின் மறுபடியும் சிதம்பரத்தை அடைந்தார்.

அங்கு இறைவி அளித்த ஞானப்பாலையுண்ட ஞானசம்பந்தரைப் பற்றிக் கேள்வியுற்றார். அவரைக் காண வேண்டும் என நினைத்தார். சீகாழி நோக்கிச் செல்லலானார். அவருடைய வருகையை ஞானசம்பந்தர் அறிந்து அடியார்கள் பின் தொடர்ந்து வர எதிர் கொண்டு வரவேற்று வணங்கினார். வணங்க, ஞானசம்பந்தர் நாவரசரின் கைகளைப் பற்றி “அப்பரே” என்றார். நாவுக்கரசர் “அடியேன்” என்றார். அதனைக் கண்டு அடியவர் மகிழ்ந்து “அரகர” என்றனர்.

அங்கு ஞானசம்பந்தரின் மடத்தில் நாவுக்கரசர் தங்கியிருந்தார். அப்போது இருவரும் சில பதிகளுக்கு சென்று வணங்கினர். பின் நாவரசர் திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை, திருநின்றியூர், திருநனிப்பள்ளி, திருசெம்பொன்பள்ளி, திருமயிலாடுதுறை, திருத்துருத்தி, திருவேள்விக்குடி, திருவெதிர்கொள்பாடி, திருகோடிகா, திருவாடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், திருப்பழையாறை முதலான தலங்களை வணங்கிச் திருச்சத்திமுற்றத்தை அடைந்தார். அங்கு “கோவாய்முடுகி” எனத் தொடங்கும் பதிகம் பாடி இறைவன் திருவடியைத் தம்முடிமீது பொறிக்கப்பெற்றார். அதனால் மகிழ்ந்து நாவரசர் அச்செயலைத் தம்பதிகத்தில் பொறித்தருளினார். அங்கு சிலநாட்கள் தங்கியிருந்தார்.

பின்பு அவர் திருப்பழனத்தை வணங்கித் திங்களூர் வழியாய்ச் சென்றார். அவ்வூரில் வாழும் அப்பூதியடிகள் தம் மகன், கிணறு, குளம் முதலியவற்றிற்கு நாவுக்கரசரின் பெயர் சூட்டியிருப்பதைக் கண்டார்.

அங்கு அப்பூதியடிகளைக் கண்டு தாம் இன்னார் எனத் தெரிவித்தார். அவர் பெரிதும் மகிழ்ந்து தம் இல்லத்தில் உணவு உண்டருளுமாறு வேண்டினார். அப்பூதியடிகளின் மகன் வாழையிலையை அரிந்திடச் சென்றபோது பாம்பு தீண்டப்பெற்று இறந்தான். அச்செய்தியை அப்பூதி அடிகள் மறைத்து உணவு உட்கொள்ள நாவரசரை அழைக்க அவர் அதனை அறிந்து அவனது சடலத்தை அவ்வூர் கோயிலுக்குக் கொணரச் செய்து " ஒன்று கொலாம்" என்ற பதிகத்தைப் பாட அம்மகன் உயிர் பெற்றெழுந்தான். அப்பூதியடிகள் பெரிதும் மகிழ்ந்தார். நாவரசர் அங்கு உணவு உண்டருளிச் சில நாட்கள் தங்கியிருந்தார். பின்பு சில பகுதிகளுக்கும் சென்று இறைவனை வணங்கிடலானார்.

சில நாட்கள் சென்றபின் நல்லூருக்குச் சென்றார். அங்குச் சிலநாட்கள் தங்கியிருந்தார். பின் பழையாறை, திருவலஞ்சுழி, கும்பகோணம், திருச்சேறை, திருகுடவாசல், திருநாறையூர், திருவாஞ்சியம், பெருவேளூர், திருவிளமர் முதலான தலங்களை வணங்கித் திருவாரூரை அடைந்தார். திருவாரூர்த் தியாகேசரை வணங்கிப் பதிகம் பாடினார். அங்கு தங்கியிருந்த நாட்களில் திருவலிவலம் முதலான பல தலங்களைச் சென்று வணங்கினார். சில நாட்கள் அங்குத் தங்கியிருந்த பின்பு " திருப்புகலூர்" இறைவரை வணங்க நினைத்தார். அப்போது திருஞானசம்பந்தர் திருப்புகலூரில் முருகநாயனார் திருமடத்தில் தங்கியிருந்தார். அவரை நாவரசர் கண்டு திருவாரூர் திருவாதிரை விழாவைப் பற்றி " முத்துவிதானம்" என்ற பதிகம் மூலம் விளக்கினார். அதனால் ஞானசம்பந்தர் திருவாரூரை வணங்கிப் பின்னர்த் திருப்புகலூருக்கு வந்தார். இருவரும் அங்குத் தங்கியிருந்தனர். அப்போது சிறுத் தொண்டனாரும் திருநீலநக்க நாயனாரும் அவர்களுடன் தங்கியிருந்தனர்.

சிலநாட்கள் சென்றன. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் புறப்பட்டுப் பல தலங்களுக்கும் செல்லப் புறப்பட்டனர். திருக்கடவூர் என்னும் தலத்தில் குங்கிலியக்கலய நாயனார் அவ்விருவரையும் உபசரித்தார். பின் திருக்கடவூர் மயானத்தை வணங்கித் திருவீழிமிழலையை அடைந்தார்.

அக்காலத்தில் வறுமை வந்தது. அதனால் சிவனடியார்கள் பெரிதும் துன்புற்றனர். அதனால் சிவபெருமான் ஞானசம்பந்தரின் கனவிலும் திருநாவுக்கரசரின் கனவிலும் தோன்றிப் ப டிக்காசு நாள்தோறும் தருவதாக உரைத்தார். அவ்விருவருக்கும் கோயிலின் கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் படிக்காசை வைத்தருளினார். அக்காசுகளால் சிவனடியார்க்கு உணவு அளித்தனர். ஞானசம்பந்தருக்குத் தரப்பட்ட காசு வட்டம் தந்து மாற்றக் கூடியதாகவும் நாவுக்கரசருக்கு தரப்பட்டது வட்டமிலா முழு மதிப்பு உடையதாகவும் விளங்கின. பின் மழை பெய்து வளம் வாய்ந்து வறுமை அகன்றது.

அவ்விருவரும் பலதலங்களை வணங்கிய வண்ணம் வேதாரணியத்தை அடைந்தனர். அங்குக் கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன. "அவை முன் காலத்தில் வேதங்களால் பூசிக்கப்பட்டுக் காப்பிடப் பட்டன" என்பதை அவர்கள் அறிந்தனர். பக்கவாயில் ஒன்றின் மூலம் அடியார்கள் உள்ளே சென்று வந்தனர்.

"இக்கதவுகள் திறக்கப்பட்டு நாம் நேரே வணங்குதல் வேண்டும். ஆதலால் இவை திறக்கும்படி, நாவரசே பாடுக!" என்றார் ஞானசம்பந்தர். நாவரசர் " பண்ணினேர் மொழியாள்" என்ற பதிகத்தைத் தொடங்கிப் பத்து பாடல்கள் பாடியும் கதவுகள் திறக்கப்படவில்லை. அப்பர் பாடலின் இனிமையில் இறைவர் மூழ்கியிருந்தார். அதனால் கதவு திறக்கக் காலம் தாழ்ந்தது. " எண்ணீர் இரக்கம் ஒன்றிலீர்" என ஒரு பாடலை நாவரசர் பாடினார். மணிக்கதவம் திறந்தது. உள்ளே சென்று இறைவனை வணங்கி வெளியே வந்தனர்.

அக்கதவுகள் திறக்கவும் மூடவும் இருத்தல் வேண்டும் என நாவரசர் எண்ணினார். எனவே கதவை மூடும்படி பாடவேண்டும் என ஞானசம்பந்தரைப் பார்த்து உரைத்தார். அவர் " சதுரம் மறைதான்" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். பாடத் தொடங்கிய முதல் பாடலிலே கதவுகள் மூடியன. அன்று முதல் அக்கதவங்கள் திறக்கவும் மூடவுமாய் அமைந்தன. தமக்கு கதவம் எளிதில் திறக்கவில்லையே என்ற மனநிலையுடன் உறங்கினார் நாவரசர். அவரது கனவில் இறைவர் வெண்ணீற்றுப் பொலிவுடன் தோன்றி " திருவாய்மூருக்கு வா!"

என்றார். நனவில், கனவில் தோன்றிய கோலத்துடன் இறைவர் தோன்றினார். வழியில் பொன்மயமான கோயில் ஒன்றைத் தோற்றுவித்து அதில் இறைவர் மறைந்தார். “எனக்குத் திருவாய்மூருக்கு வா எனப் பணிந்து மறைந்தீர். வலியக் கதவைத் திறக்கச் செய்த எனக்கு மறையலாம். ஆனால் எளிதில் மூடிய இவருக்கு(சம்பந்தருக்கு) மறையலாமோ?” எனப் பாடினார் நாவரசர். இறைவர் ஞானசம்பந்தருக்குக் காட்சியளித்தார்.

நாவரசர் பழையாறை என்ற தலத்திற்குச் சென்றார். அங்கு சமணர், சிவலிங்கத்தை மறைத்துத் தம் கோயிலாகச் செய்திருந்தனர். மறுபடியும் அக்கோயிலில் சிவபெருமான் இருக்கக் கண்டு வணங்கினால் அன்றி அங்கிருந்து செல்ல மாட்டேன் எ ன்று அவர் உண்ணா நோன்பை மேற்கொண்டார். உடனே இறைவர் மன்னன் மூலமாக அங்கிருந்த சமணரை நீங்கிடுமாறு செய்தார். மன்னன் அந்தப் பழையாறை வடதளியை முன்போல் சிவன் கோயிலாக்கினான்.

அதன்பின் அவர் பல தலங்களையும் வழிபாடு செய்து கொண்டு திருப்பைஞ்ஞீலிக்கு வந்தார். அவருக்கு அப்போது பசியும் தாகமும் உண்டாயின. அவரது பசியைப் போக்க இறைவர் கட்டுச்சோற்றைத் தந்து களைப்பாறும்படி செய்தார். அவருடனே பைஞ்ஞீலிக்கு மறையவராய் வந்த இறைவர் அங்கு மறைந்தார். இறைவர் அருளை எண்ணி நாவரசர் பதிகம் பாடினார். திருவோத்தூர், முதலான தலங்களை வணங்கிக் காஞ்சியை அடைந்தார். இறைவனை வணங்கித் திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், மயிலாப்பூர், திருவொற்றியூர், திருப்பாசூர், திருவாலங்காடு, திருக்காரிக்கரை என்ற தலங்களையும் வணங்கிக் காளத்தியை அவர் அடைந்தார். வணங்கினார்.

காளத்தி மலையிலிருந்து கயிலையைச் சென்று இறைவரை வணங்க எ ண்ணினார். பல பதிகளையும் வணங்கிக் காசியை அடைந்தார். அங்கிருந்து தம்முடன் வந்த அடியார்களை விட்டுவிட்டுத் தாம் மட்டும் தனியாய் கயிலைக்குச் செல்லத் தொடங்கினார். அடர்ந்த காட்டில் தனியாய் காய் கனி கிழங்கு முதலியவற்றை உண்ட வண்ணம் சென்றார். அவரைக் கண்டு கொடிய விலங்குகள் அஞ்சி விலகின. இரவு பகலாக

அரிய வழியில் சென்றார். கால் தேய்ந்து குருதி வடிந்தது. கைகளை ஊன்றிச் சென்றார். அவையும் தேய்ந்தன. மார்பினால் தவழ்ந்து சென்றார். மார்பும் தேய்ந்தது. ஆயினும் அவர் மனம் தளரவில்லை. அவ்வளவில் இறைவர் குளிர் பொய்கையை உண்டாக்கி முனிவர் கோலத்துடன் அப்பர் எதிரே போனார். " இப்படி உம் உடல் எல்லாம் தேய இங்கு வந்ததேன்?" என்று இறைவர் வினவினார். " கயிலாயத்தில் சிவபெருமானைக் காண வந்தேன்!" என்றார். " அதனைக் காணல் அரிது. மீண்டு செல்வதே தக்கது!" என்றார் இறைவர். நாவரசர் " இறைவர் வீற்றிருக்கும் கோலத்தைக் கண்டன்றி மீளேன்!" என்றார்.

அவ்வளவில் முனிவராய் வந்த இறைவர் மறைந்தார். அசரீரியாக, " நாவரசே! எழுந்திரு!" என்றார். நாவரசர் தேய்ந்த உறுப்புகள் எல்லாம் வளரப் பெற்றவராய் எழுந்து நின்றார். " நீ இப்பொய்கையில் முழுகின் திருவையாற்றில் எழுந்திருப்பாய். அங்கு நாம் கயிலையில் வீற்றிருக்கும் காட்சியைக் காணலாம்!" என்றார் இறைவர். இறைவர் பணித்தவண்ணமே அப்பொய்கையில் முழுகித் திருவையாற்றில் உள்ள குளத்தில் எழுந்தார். இறைவர் திருக்கயிலாயக் கோலத்தை அவர் காணும்படி காட்டியருளினார். அக்கோலத்தை கண்டு மகிழ்ந்த நாவரசர் " மாதர் பிறைக் கண்ணியானை" என்றப் பதிகத்தைப் பாடினார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருநெய்த்தானம், திருமழபாடி, முதலான பதிகளை வணங்கித் திருப்பூந்துருத்தியை அடைந்தார். அங்கு மடம் ஒன்றைக் கட்டி அதில் தங்கியிருந்தார். அப்போது ஞானசம்பந்தர் சமணரை வாதில் வென்றபின் திருப்பூந்துருத்திக்கு வந்தார். அவருடன் அளவு கடந்த அடியார் கூட்டம் வந்தது. அப்போது ஞானசம்பந்தர் அமர்ந்து வந்த பல்லக்கை நாவுக்கரசர் சுமந்தார். திருப்பூந்துருத்தியை அடைந்ததும் " நாவுக்கரசர் எங்கே உள்ளார்?" என்று வினவினார். " அடியேன் இங்குள்ளேன் என்று நாவுக்கரசர், சொல்லக்கேட்டு ஞானசம்பந்தர் மனம் பதைத்துப் பல்லக்கினின்று இறங்கினார். நாவுக்கரசரை வணங்கினார். அவரும் ஞானசம்பந்தரை வணங்கினார். இருவரும் இறைவரின் கோயிலுக்குள் சென்று வணங்கினர். நாவுக்கரசர் வேண்டிக்கொண்டபடி ஞானசம்பந்தர் தொண்டை நாட்டுக்குச் சென்றார்.

நாவரசர் மதுரையை அடைந்தார். அங்கு மங்கையர்க்கரசியார், பாண்டியன், குலச்சிறையார் முதலியோர்கள் நாவுக்கரசரை வணங்கினர். சில நாட்கள் திருப்பணிகளைச் செய்தார் நாவரசர்.

அங்கு நாவரசர் உழவாரப் படையினால் கோயிலைச் சுற்றியுள்ள புல்லைச் செதுக்கிக் கொண்டிருந்தார். அங்கு பொன்னும் மணியும் கிடக்குமாறு இறைவர் அருள் செய்தார். அவையெல்லாவற்றையும் வலம் வரும் அடியார்களின் கால்களை வருத்தும் என்று உழவாரப் படையால் ஒதுக்கி எடுத்துப் பொய்கைக்குள் எறிந்தார். இந்நிகழ்ச்சி அவருக்குப் பொன்னாசை இல்லாமையைப் புலப்படுத்தும்.

பின் "அவர் பெண்ணாசை அற்றவர்" என்பதைப் புலப்படுத்த நினைத்தார் இறைவர். வானத்தினின்று அரம்பை முதலான தெய்வப் பெண்கள் அவருக்கு முன் தோன்றினர். பாடி ஆடத் தொடங்கினர். அதனால் நாவரசரின் மனம் சலனப்படவில்லை. அவர்களை நோக்கி " உங்களால் எனக்கு ஆகக்கூடியது ஏதும் இல்லை. திருவாரூர் அம்மானுக்கு ஆளானேன். வீணே அலைய வேண்டா!" என்றார்.

அதன்பின் இறைவரைக் குறித்துப் பல விருத்தங்கள் பாடிப் பின் " எண்ணுகேன்" என்ற திருத்தாண்டகம் பாடி அடைவதற்கரிய சிவானந்தத்தை அடைந்தார், நாவரசர்.

**வரலாற்றுக் குறிப்பு**

| | |
|---|---|
| பிறந்த ஊர் | திருவாமூர் |
| நாடு | நடுநாடு |
| தாய் | மாதினியார் |
| தந்தை | புகழனார் |
| குடி | குறுக்கையர் |
| குலம் | வேளாளர் |
| மதம் | சைவசமயம் |
| தமக்கையார் | திலகவதியார் |
| காலம் | 7ம் நூற்றாண்டு |
| வேறு பெயர்கள் | மருள்நீக்கியார், பகையார் தருமசேனர், வாகீசர், தாண்டகவேந்தர், ஆளுடைய அரசு, அப்பர் |
| சமகால அரசன் | மகேந்திர வர்மன் |
| முத்தி பெற்ற ஊர் | திருப்புகலூர் |
| வய து | 81 |
| குருபூசை நட்சத்திரம் | சித்திரை சதயம் |
| பாடிய பாடல்கள் | 4,5,6ம் திருமுறைகள் |
| மொத்த பதிகங்கள் | 306 |
| மொத்த பாடல்கள் | 3067 |
| பாடிய தமிழ் | கெஞ்சு தமிழ் |
| வழிபட்ட நெறி | தொண்டு நெறி |

## 5. பயிற்சிப் பகுதி

***சில மாதிரி வினாக்கள்***

### I.தெரிவு வினாவிடை

சரியான விடையைக் கண்டுபிடித்து அதற்குரிய எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. சம்பந்தர் தாளம் பெற்ற ஊர் எது?
   1. சீர்காழி
   2. திருக்கோலக்கா
   3. திருஆலவாய்
   4. திருமறைக்காடு ( )

### II. படங்களின் பெயர்களை எழுது

2. படங்களும், சொற்களும் கொடுக்கப்பட்டுள்ளன. படத்திற்கு ஏற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய கட்டத்தில் எழுதுக.





| |
|---|
| நடராசர், **முருகன்**, யானை, **விநாயகர்** |

## III. தொடர்புடைய சரியான சொற்களைக் கோடிட்டு இணைக்கவும்

| | | | |
|---|---|---|---|
| அருநெறிய மறை | ☼ | ☼ | சுந்தரர் |
| உலகெலாம் | ☼ | ☼ | திருஞானசம்பந்தர் |
| காரூர் புனல் | ☼ | ☼ | சேக்கிழார் |

## IV. சரியான துணைச் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை நிறைவு செய்க

1. ம யிலாப்பூரில் _______________ என்பவரின் மகளைத் திருஞானசம்பந்தர் சாம்பலில் இருந்து எழுப்பினார்.

| | |
|---|---|
| அப்பூதிஅடிகள் | சிவநேசச் செட்டியார், |
| சிவபாத இருதையர் | |

## V விடுபட்ட தொடர்களை நிரப்புக

தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி

________________________________________________

## VI.பொருத்தமான துணைச் சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக

1. திருவிசைப்பா ______________________________

| 8ஆம்திருமுறை | 10ஆம்திருமுறை | 9ஆம்திருமுறை |
|---|---|---|

## VII. வட்டம் இடுக

1. திருஞான சம்பந்தர் பிறந்த ஊர்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | தி | அ | மா | ணி | க் | க | வா | ச | க | ர் |
| தி | ரு | ஞா | ன | ச | ம் | ப | ந் | த | ர் | ஈ |
| ரு | ப் | நா | ல் | வ | ர் | து | தி | ரு | மு | றை |
| மூ | ப | ஆ | சா | இ | ந் | த | ள | ம் | போ | சி |
| ல | ல் | ல | தா | சி | வா | ய | தி | சே | ற் | த |
| ர் | லா | வா | ரி | ந | ந் | தி | ரு | க் | றி | ம் |
| ர | ண் | ய் | சி | பி | த் | தா | வா | கி | தி | ப |
| த | டு | ம | தே | வா | ர | ம் | ச | ழா | ல் | ர |
| ந் | ந | உ | சீ | ர் | கா | ழி | க | ர் | லை | ம் |
| சு | பெ | ரி | ய | பு | ரா | ண | ம் | க | யி | லை |

## VIII. கேள்வி – பதில்

1. “தோடுடைய செவியன்”என்ற பாடலைப் பாடியவர் யார்?
   திருஞானசம்பந்த சுவாமிகள்
2. “தோடுடைய செவியன்”என்றபாடல் எங்குப் பாடப்பெற்றது?
   சீர்காழி
3. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் பாடிய முதல் பாடல் எது?
   தோடுடைய செவியன்
4. “ மந்திரமாவதுநீறு” என்ற பாடலைப் பாடிய அருளாளர் யார்?
   திருஞானசம்பந்த சுவாமிகள்
5. “ மந்திரமாவது நீறு” என்றபாடல் எந்தத் தலத்தில் பாடப்பெற்றது?
   திருஆலவாய் ( மதுரை )
6. “ கூற்றாயினவாறு” என்ற பாடலைப் பாடிய அருளாளர் யார்?
   திருநாவுக்கரசு சுவாமிகள்
7. “ கூற்றாயினவாறு” என்ற பாடல் எந்தத் தலத்தில் பாடப்பெற்றது?
   திரு அதிகைவீரட்டானம்
8. திருநாவுக்கரசர் பாடிய முதல் பாடல் எது?
   கூற்றாயினவாறு
9. “ மாசில்வீணையும்” என்ற பாடலைப் பாடிய அருளாளர் யார்?
   திருநாவுக்கரசு சுவாமிகள்
10. “ நமச்சிவாயவே” என்ற பாடலைப் பாடிய அருளாளர் யார்?
    திருநாவுக்கரசு சுவாமிகள்
11. “ வேற்றாகி” என்ற பாடலைப் பாடிய அருளாளர் யார்?
    திருநாவுக்கரசர்
12. “ வேற்றாகி” என்ற பாடல் எந்த தலத்தில் பாடப்பெற்றது?
    திருக்கயிலாயம்
13. “ பித்தாபிறைசூடி” என்ற பாடலைப் பாடிய அருளாளர் யார்?
    சுந்தர மூர்த்தி சுவாமிகள்
14. “ பித்தாபிறைசூடி” என்ற பாடல் எந்தத் தலத்தில் பாடப்பெற்றது?
    திருவெண்ணெய்நல்லூர்
15. சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடிய முதல் பாடல் எது?
    “ பித்தாபிறைசூடி”
16. “ அம்மையேஅப்பா” என்ற பாடலைப் பாடிய அருளாளர் யார்?
    மாணிக்கவாசக சுவாமிகள்

17. “ உலகெலாம்” என்ற பாடலைப் பாடிய அருளாளர் யார்?
சேக்கிழார் சுவாமிகள்

18. திருமுறைகள் மொத்த எண்ணிக்கை என்ன**?**
பன்னிரண்டு

19. பன்னிருதிரு முறைகளை அருளிய ஆசிரியர்கள் மொத்தம் எத்தனை பேர்**?**
இருபத்தேழு

20. முதன் மூன்று திருமுறைகளைப் பாடியவர் யார்?
திருஞானசம்பந்தர்

21. 4,5 மற்றும் 6 ஆம் திருமுறைகளைப் பாடியவர் யார்?
திருநாவுக்கரசர்

22. 7ஆம் திருமுறையைப் பாடியவர் யார்?
சுந்தரமூர்த்திசுவாமிகள்

23. 8ஆம் திருமுறையைப் பாடியவர் யார்?
மாணிக்கவாசகர்

24. 8ஆம் திருமுறையைப் பாடியவர் யார்?
மாணிக்கவாசகர்

25. திருமூலர்அருளிய 10ம் திருமுறையின் பெயர் என்ன**?**
திருமந்திரம்

26. பன்னிரண்டாம் திருமுறையை அருளிய ஆசிரியர் யார்**?**
சேக்கிழார் சுவாமிகள்

27. திருஞானசம்பந்தர் சுவாமிகள் பிறந்த ஊர் எது**?**
சீர்காழி

28. திருஞானசம்பந்தர் சுவாமிகளுடைய பெற்றோர்கள் யார்**?**
சிவபாத இருதயர், பகவதி அம்மையார்.

29. திருநாவுக்கரசர் சுவாமிகள் இறைவனை வழிபட்ட நெறி என்ன**?**
தொண்டு நெறி

30. திருநாவுக்கரசு சுவாமிகளின் தமக்கையார் யார்?
திலகவதியார்

# 5. பாடத்திட்ட நூலாக்கத்திற்குப் பயன்பட்ட நூல்கள்

**சைவ சமயம் ஓர் அறிமுகம்**

நன்றி: http://www.shaivam.org

**திருஞானசம்பந்தர் வரலாறு**
**திருநாவுக்கரசர் வரலாறு**

நன்றி: பெரியபுராணம்
மூலமும் தெளிவுரையும்
உரையாசிரியர் புலவர் அ. மாணிக்கனார். தமிழ் பேராசிரியர்